தமிழ் கீதை 151

நமது ஹிந்து சமய புனித நூலான பகவத் கீதை, வாழ்வியல் நெறிமுறைகளை கூறும் நூலாகும்.இந்த நூலை எளிய முறையில் மாணவர்களிடம் , சாதாரண மக்களிடமும் கொண்டு செல்வதற்காக, விவேகானந்த கேந்திரம் வெளியிட்டுள்ள தமிழ் பகவத் கீதை நூலிலிருந்து 151 சிறப்பு வாய்ந்த பாடல்களை மட்டும் நாம் கற்க இருக்கிறோம் .

இதன் நோக்கம் என்னவென்றால் பகவத்கீதை கூறும் அடிப்படை விஷயங்களை புரிந்து கொள்ள வேண்டும். நமது சமயத்தின் புனித நூலை பற்றிய பற்றிய அறியாமை ஹிந்துக்களுக்கு இருக்கக்கூடாது, என்ற நோக்கத்தில் இந்த வகுப்பு நடத்தப்படுகிறது. அனைவரையும் தமிழ் கீதை கற்க அன்புடன் அழைக்கிறோம்

1. தியான ஸ்லோகம்

பார்த்தனுக்காகப் பரம்பொருள் பகவான்
நாராயணனே ஓதிய மொழியே!
வேதவியாஸர் புராண முனிவர்
மகாபாரதத்தின் நடுநாயகமாய்ப்
பதினெண் அதிகாரங்களில் அருளப்
பிறவிப் பிணியை அகற்றும் தேவி
அத்வைத அமுதை அருளும் தாயே
பகவத்கீதே! போற்றி! போற்றி!

அர்ஜுனுக்காக ஸ்ரீமன் நாராயணன் சொன்ன வாக்கே! புராணத்தை கொடுத்த வேதவியாசர் மகாபாரதத்தில் 18 அத்யாயங்களில் நடுநாயகமாய் இருப்பவளே!! பிறவிப்பிணியைத் தீர்க்கும் தேவியே!! அத்வைத அமுதத்தை எமக்கு அருளும் தாயே! பகவத் கீதையே!! உன்னை நான் வணங்குகிறேன்!

2.குரு வணக்கம்

விசாலமதியே நிறைந்த ஸத்குருவே
தாமரைப் பூநிகர் ஒளிமிகும் கண்ணா
மகாபாரத மெய்நிறை ஞானத்
தீபம் ஏற்றிய வியாஸரே போற்றி!

விசாலமான பரந்த ஞான உலகின் குருவான வியாச முனிவரே! தாமரை பூப்போன்று ஒளி கண்களை உடைய குருவே! மகாபாரதம் எனும் இதிகாசத்தை கொடுத்த குருவே! உங்களை வணங்குகிறேன்

3. ஸ்ரீ கிருஷ்ணர் துதி

சரண் புகுவோரின் கற்பகத்தருவே
கோலொடு ஆனிரை காக்கும் கண்ணா
கீதையாம் அமுதைக் கனிந்தருள்வோனே
ஞானமுத்திரை உடையாய் போற்றி!

தன்னிடம் சரண் புகுந்தவர்களுக்கு கற்பக மரம் போன்று வாரி வழங்கும் கண்ணா!
கையில் கம்போடு பசுக்களை காத்திடும் கண்ணா!
கீதை என்ற அரிய ஞான அமுதை எங்களுக்கு கொடுத்து அருளிய கண்ணா! உள்னை சரணடைகிறேன்

4.கீதையின் சாரம்

உபநிஷத எல்லாம் பசுக்களாம்
அவற்றின் பாலோ கீதையாம்
பசுவைக் கறப்போன் கண்ணனாம்
மகிழும் கன்றோ பார்த்தனாம்
அருந்திடுவோரோ ஞானியர்
மகத்தாம் கீதை அமுதமே

புராணகாலத்தில் தோன்றிய உபநிஷத்துக்கள் தான் கீதையின் ஆதாரம்! அந்த உபநிஷத்துக்கள் பசுக்களாகவர்ணிக்கப்படுகிறது! பசுவில் இருந்து பால் பெறுவது போல் உபநிஷத்துக்களிலிருந்து கீதை பெறப்படுகிறது. கிருஷ்ணர் அந்த உபநிஷத்துகளை பால்காரர்கள் ஒன்று நமக்கு கறந்து தருகிறார். பாலைப் பார்த்ததும் கன்று மகிழ்வது போல் அர்ஜுனன் மகிழ்கிறான். பாலை பருகுவது போல் இந்த கீதை அமுதத்தை பருகினால் ஞானிகள் ஆவார்கள்.

மகாபாரத போரில் அர்ஜுனன் போர் செய்யாமல் தயங்கி இருந்த போது , ஸ்ரீ கிருஷ்ணர் அவனுக்கு கூறிய அறிவுரை தான் பகவத்கீதை ஆகும். இந்த நூலில் 18 அத்தியாயங்களம் 700 ஸ்லோகங்களும் உள்ளன. இந்த பூமியில் நாம் வாழும் போது கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளை கிருஷ்ணர் நமக்கு எடுத்துரைக்கிறார்.

5. **முதல் அத்யாயம் 5.அர்ஜுன விஷாத யோகம் ஸ்லோகம் 1**	தர்மக் களமாம் குருக்ஷேத்திரத்தில் வர்மப் போரினை விரும்பித் திரண்ட நம்மவர் பாண்டவர் படையிடை நேர்ந்த இம்மா சமரை ஸஞ்ஜய கூறாய்!"	"சஞ்சயா! தர்ம பூமியான குருஷேத்திரத்தில் யுத்தம் செய்ய விரும்பி கூடியுள்ள என் புதல்வர்களும் பாண்டுவின் புதல்வர்களும் என்ன செய்தார்கள்.?..." என்று கேட்டார்.
6. **முதல் அத்யாயம் அர்ஜுன விஷாத யோகம் ஸ்லோகம் 21**	யாரொடு யானும் போர்செய என்றும் போரிட விழைவோர் யாரே என்றும் நேரிலே அச்சுதா! யானே கண்ணுற இருபடை நடுவே நிறுத்துக நம்தேர்	கண்ணா! என்னுடைய ரதத்தை இரண்டு படைகளுக்கும் நடுவில் நிறுத்துங்கள். என்னுடன் போர் புரிய இருக்கும் எதிரி படை வீரர்களை பார்க்க விரும்புகிறேன்...என்று அர்ஜுனன் கூறினான்
7. **முதல் அத்யாயம் அர்ஜுனன் விஷாத யோகம் ஸ்லோகம் 27**	அணியாய் நின்ற சுற்றத்தாரை உற்றுப் பார்த்தான் குந்தியின் மைந்தன் ஆழ்ந்த இரக்கம் மிஞ்சிய உள்ளத்தால் சோகம் மேலிட உரைப்பானானான்	கூடியிருந்த அனைத்து உறவினர்களையும் நன்கு பார்த்த குந்தியின் மகனான அர்ஜுனன் மிகுந்த இரக்கத்தோடு கூடியவனாக வருத்தம் கொண்டு பேச ஆரம்பித்தான்.
8. **முதல் அத்யாயம் அர்ஜுனன் விஷாத யோகம் ஸ்லோகம் 28**	கண்ணா போரே புரிவோம் என்று நம்முன் அணியாய் நின்றுடும் இந்தச் சுற்றம் தனையே கண்டிட எனது அங்கம் சோர்ந்து வாய் வறல்கிறதே	"கிருஷ்ணா! போர்க்களத்தில் போர் புரிய நிற்கின்ற உறவினர் கூட்டத்தை பார்த்து என் அங்கங்கள் சோர்வடைகின்றன.... வாய் உலர்கிறது..... என் உடலில் நடுக்கம் ஏற்படுகிறது..." என்று அர்ஜுனன் கூறினான்
9. **முதல் அத்யாயம் அர்ஜுனன் விஷாத யோகம் ஸ்லோகம் 35**	யானே போரில் மாய்ந்தே போயினும் மூவுலகாளுகை பெற்றிடக்கேனும் மதுசூதனா? யான் இவர்களைக் கொல்லேன் பூமியை ஆள கொலை புரிவேனோ	மதுசூதனா! என்னை கொன்றாலும், மூன்று உலக அரசாட்சி கிடைத்தாலும் இவர்களை கொல்ல நான் விரும்பவில்லை. வெறும் இந்த ராஜ்யத்துக்காக இவர்களை கொல்ல வேண்டுமா?" என்று அர்ஜுனன் கேட்டான்.
10. **முதல் அத்யாயம் அர்ஜுனன் விஷாத யோகம். ஸ்லோகம் 47**	இவ்வாறியம்பிய அர்ஜுனன் அங்கே வில்லோடு அம்பை உதறிய பின்னே சோகம் நிறைந்த மனத்தின னாகத் தேர்ப்பிடத்தின் மேலே சாய்ந்தான்	பொருள்: போர்க்களத்தில் சோகத்தால் கலங்கிய அர்ஜுனன் அம்பு வில்லை வைத்துவிட்டு தேர்த்தட்டில் உட்கார்ந்து விட்டார்.
11. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 2**	அர்ஜுனா இந்த உள்ளச் சோர்வினை இப்போ தெங்கே நீ பெற்றாய்? வீரர்க் கொவ்வா நிலை ஈதன்றோ! சுவர்கமும் கீர்த்தியும் ஒருங்கேபோம்!	அர்ஜுனா!!! இந்த நேரத்தில் இந்த தயக்கம் உனக்கு எப்படி வந்தது??! இது வீரர்களுக்கான மனநிலை கிடையாது! இந்தத் தயக்கம் சொர்கத்தையும் புகழையும் தராது!" என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறினார்.
12. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 3**	பேடித் தனத்தைக் கொள்ளாதே நீ பார்த்தா உனக்கிது ஒவ்வாது இழிவாம் உள்ளச் சோர்வை நீக்கி எழுக பகைவரை அழிப்போனே	அர்ஜுனா! பேடியின் தன்மையை அடையாதே. உனக்கு இது பொருத்தமானது அல்ல. உள்ளச் சோர்வு என்பது இழிவானது. இந்தச் சோர்வை விடுத்து போருக்காக எழுந்து நில்....என்று கிருஷ்ணர் கூறினார்
13. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 7**	கிருபணன் என்னும் குறையுற் றதனால் அறன் யாதென்றே உணரேன் யான் நன்றாம் ஒன்றே திடமாய்ச் சொல்வீர் யான் நும் சீடன் சரணுற்றேன்.	கிருஷ்ணா! குழம்பிய மனநிலை உடைய நான், தர்மம் என்ன வென்று அறியாமல் வருந்துகிறேன்! நான் உங்களது சீடன். உங்களை சரண அடைகிறேன். எனக்கு நல்ல அறிவுரையை கூறுங்கள்!" என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் சரணடைந்தான்
14. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 10	பாரதமன்னா! அர்ஜுனன் உரையால் புன்னகை பூத்தார் கண்ணபிரான் இருபடை நடுவே இரங்கியே நின்ற பார்த்தனைத் தேற்ற அருள் செய்தார்	பாரத மன்னா! திருதராஷ்டிரரே! அர்ஜுனன் கூறிய வார்த்தைகளை கண்டு, கிருஷ்ணர் புன்னகைத்தார். இரண்டு படைகளுக்கு நடுவில் கலங்கி நின்ற அர்ஜுனனை தேற்றுவதற்காக, கிருஷ்ணர் பேச ஆரம்பித்தார்

15. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 11	ஞானியைப் போலே உரைசெயும் நீயோ அறிவிலி போலத் துயர் கொண்டாய் இறந்தார்க் கேனும் இறப்போர்க் கேனும் வருந்தார் ஞானியர் எந்நாளும்	அர்ஜுனா! நீ ஞான மிக்க பண்டிதர்கள் போன்று பேசுகிறாய்!!! ஆனால் அறிவு இல்லாதவர்கள் போல் துயர் கொள்கிறாயே?! பண்டிதர்கள் உயிர் போனவர்களுக்காகவும் உயிர் போகாதவர்களுக்காகவும் வருந்துவதில்லை..." என்று கிருஷ்ணர் கூறினார்
16. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 13	குமரப் பருவமும் இளமை மூப்பும் தோன்றுதல் போலே மறுபிறப்பாம் அழியாப் பொருளாம் ஆத்மா நாமே தீரன் அதனால் மயக்கமுறான்	குழந்தைப் பருவமும் இளமைப் பருவமுண வய்தான பருவமும் எவ்வாறு இயல்பாகத் தோன்றுகிறதோ அதுபோன்றே மறுபிறப்பும் இயல்பாகவே இயல்பாகவே தோன்றும் ஆத்மா என்றும் அழியாதது ஆதலால் தீரர்கள் இதைக குறித்து கவலைப்படுவதில்லை!
17. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 15**	யாரோ இவற்றால் துயரம் நீங்கி உண்மை உணர்ந்து தனை ஆள்வான் அவனே தீரன், அவனே ஞானி அவனே அழியா நிலையுற்றான்	அர்ஜுனா! சுக துக்கங்களை சமமாக ஏற்கின்ற மனிதனை, புலன்கள் மற்றும் உலக ஆசைகள் கலங்கவைப்பதில்லை. அவனே தீரன்! அவனே ஞானி! அவன் மோட்சத்துக்கு தகுதி பெறுகிறான்" என்று கிருஷ்ணர் கூறினார்.
18. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 16	இல்லாததற்கு இருப்பும் யாது? உள்ளதற்கென்றும் அழிவேது? இதனை உணரும் திறனைப் பெற்றோர் உயர்ந்த உண்மை உணர்ந்தோரே	இல்லாத ஒரு பொருளுக்கு இருப்பது என்பது இல்லை. உண்மையாக இருக்கும் ஒரு பொருளுக்கு இல்லாமல் என்பது இல்லை. இதனை அறியும் திறன் உடையவர்கள் உயர்ந்த உண்மையை அறிந்த தத்துவ ஞானிகள் ஆவார்கள்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
19. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 17	அப்பொருள் ஒன்றே நிலையாய் உளது நாசம் அற்றதும் அதுவேதான் உலகை முற்றும் நிரப்பிடச் செய்வதும் அழிவறியாததும் அப்பொருளே	அர்ஜுனா! ஆத்மா என்றும் நிலையாய் உள்ளது. அதை அழிக்க இயலாது. உலகம் முழுதும் நிரம்பி இருப்பதும் அழிவே இல்லாத பொருளும் ஆத்மா ஆகும் என்று கிருஷ்ணர் கூறினார்.
20.. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 20	ஆத்மா என்றும் பிறவான், இறவான் பிறந்தபின் வாழ்ந்து மடியாதான் பிறவா நித்தியன் என்றும் உள்ளோன் தொல்லோன் உடலோடு முடியாதான்	ஆத்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. ஆத்மா பிறந்த பின் வாழ்ந்து மறைந்தும் இல்லை. ஆத்மா நித்யமானது. எக்காலத்திலும் உள்ளது. உடல் அழிந்தாலும் ஆத்மா அழிவதில்லை
21.. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 22	பழுதாம் உடையைக் களைந்த பின் நல்ல புத்துடை அணிதல் போலாமே நைந்த உடலம் யாவையும் ஆத்மா, நீக்கிப் புதியன எய்துவதாம்	"எப்படி மனிதன் நைந்து போன பழைய துணிகளை நீக்கிவிட்டு... வேறு புதிய துணிகளை எடுத்துக் கொள்கிறானோ அவ்வாறே ஜீவாத்மா நைந்து போன பழைய உடல்களை நீக்கிவிட்டு புதிய உடலை அடைகிறது.. "என்று கிருஷ்ணர் கூறினார்
22. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 23	ஆயுதம் இவனை அழிப்பதோ இல்லை தீயொடு, நீரும் பெருங் காற்றும் ஆதமா வாகிய உறுபொருள் தன்னை அழிக்கும் வலிமை அற்றனவே	"இந்த ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டுவதில்லை. நெருப்பு எரிப்பதில்லை தண்ணீர் நனைப்பதில்லை மேலும் காற்று உலர வைப்பதில்லை... என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்
23.. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 27	பிறந்தோன் என்றோ மறைவது உறுதி இறந்தோன் மீண்டும் பிறப்பதும் மெய் எனவே தவிர்க்க இயலா இயற்கைக்(கி) இரங்கிச் சோர்தல் அறிவாமோ	"பிறந்தவனுக்கு இறப்பு நிச்சயமானது: இறந்தவனுக்கும் பிறப்பு நிச்சயம். ஆகவே, தவிர்ப்பதற்கான வழியே இல்லாத இந்த விஷயத்தில் நீ துயரப்படுவது சரியன்று.."என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
24. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 30	உடலம் தனையே உறைவிடம் ஆக்கிய ஆத்மா அழியான் என்றறிவாய் எனவே பார்த்தா உயிர்களை எண்ணி என்றும் கலக்கம் கொள்ளாதே	பொருள்: "இந்த ஆத்மா எல்லோருடைய உடலிலும் எப்போதும் கொல்லப்பட முடியாததாகவே இருக்கும். எனவே இறப்பை எண்ணி கவலைப்படாதே..." என்று கிருஷ்ணர் கூறினார்
25. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 33**	அறப் போராகிய இதனைத் துறந்தால் அறமும் புகழும் இழந்தோனாய்த் தன் கடன் ஆற்றாத் தவறுதலாலே மாபெரும் தீமை வந்துறுமே	அர்ஜுனா! தர்மத்துக்காக நடைபெறும் இந்த யுத்தத்தை நீ செய்யாவிட்டால் உன்னுடைய கடமையை செய்ய தவறியவனாய் ஆவாய்! கடமையை செய்ய தவறுவதால் உன்னுடைய புகழ் அழியும், தீமை வந்து சேரும்", என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்

26. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 34**	ஆடவர் உன்னை இகழ்ந்தே தூற்றி ஏளன மொழிகள் உரையாரோ புகழால் விளங்கும் வீரன் பிறரால் இகழப் படுதல் சாவினும் கீழ்	பொருள்: "அர்ஜுனா.. வீரர்கள் உன்னுடைய இந்த கோழைத்தனத்தை கண்டு ஏளன மொழிகள் கூறுவார்கள். புகழ்மிக்க வீரன் பிறரால் இகழப்படுதல் இறப்பினும் கீழானது" என்று கிருஷ்ணர் கூறினார்
27. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 37**	சமரில் மாண்டால் சுவர்கம் பெறுவாய் வெற்றியே பெற்றால் புவியாள்வாய் எனவே வீரா! பாண்டவர் ஏறே! வீறொடு போர் செயத் துணிவாய் நீ,	பொருள்: அர்ஜுனா! இந்த தர்ம யுத்தத்தில் இறந்தால், சொர்கம் பெறுவாய்! வெற்றி பெற்றால் இந்தப்புவியை ஆள்வாய்! பாண்டவ வீரனே !!துணிந்து போர் செய்! என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
28. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 38**	இன்ப துன்பம், இலாப-நஷ்டம் எய்தும் வெற்றி தோல்விகளை என்றும் சமமாய்க் கருதியே போர்செய் இதனால் தீமை என்றுமிலை	பொருள்: வெற்றி-தோல்விகளையும், இலாப-நஷ்டங்களையும், சுக-துக்கங்களையும் சமமாகக் கருதி, அதற்குப்பின் யுத்தத்திற்குத் தயாராவாயாக. இவ்விதம் யுத்தம் செய்வதால் நீ பாவத்தை அடையமாட்டாய்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
29. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 39**	இவ்வாறுரைத்தேன் ஆத்ம ஞானம் இனியும் பார்த்தா கூறக் கேள் அரிதாம் யோகப் பொருளாம் அதுவே கர்மத் தளையைப் போக்குவதாம்	பொருள்: பார்த்தா! இந்த புத்தி உனக்கு ஞான் யோகத்தில் கூறப்பட்டது. இனி இதை கர்ம யோக விஷயத்தில் கேள் இந்த புத்தியோடு கூடியவனாக ஆகி கர்ம பந்தத்தை முழுமையாக விலக்கி விடுவாய்! "என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
30. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 40**	கர்ம யோகம் தனையே புரியும் முயற்சிக் கென்றுமே அழிவில்லை அறத்தாரிதனால் தீதும் இல்லைச் சற்றே புரியினும் வீடுறுவாய்	அர்ஜுனா! இந்த கர்ம யோகத்தில் ஆரம்பம் முடிவு என்பது இல்லை நேர் எதிரான விளைவுமில்லை இந்த கர்மயோகம் என்ற தர்மத்தை சிறிதளவு பின்பற்றினால் கூட பெரிதான பிறப்பு இறப்பு பயத்திலிருந்து விடுபடுவாய்" என்று கிருஷ்ணர் கூறினார்
31. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 41**	குருகுலவீரா.. இப்பெரு நெறியில் உறுதி உடையோன் மதி திடமாம் அவனது மதியே ஓர்நிலை உளதாம் 'நிச்சயம் அற்றோர் மதி பலவாம்.	இந்த நெறிமுறையில் நாட்டமும் நம்பிக்கையும் இல்லாதவர்களுக்கு புத்தி பலவாக இருக்கும்" என்று கிருஷ்ணர் கூறினார்
32. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 44**	போகமும் ஆட்சியும் துய்ப்பதிலேயே பற்றுதல் கொண்டோர் சொற்கேட்டு மையல் கொண்டோர் மதியின்மையினால் அமைதி என்றும் எய்தாரே	போகங்கள் மற்றும் செல்வங்கள் பெறுவதற்குரி கவர்ச்சியான பேச்சால் ஈர்க்கப்பட்டு அதன் மேல் ஆசை கொண்டவர்கள் மதி மயங்கி, அமைதியை என்றும் அடைய மாட்டார்கள்" என்று கிருஷ்ணர் கூறினார்
33. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 47**	வினையே புரிதல் உன்கடனாய்க் கொள் பலனில் உரிமை உனக்கில்லை. வினைப்பயன் நல்கும் ஏதுவும் நியல வினையற் றிருக்கவும் விரும்பாதே	. அர்ஜுனா! உனக்கு செயல்களை ஆற்றுவதற்குத்தான் உரிமை உண்டு. அவற்றின் பலன்களில் ஒருகாலும் உனக்கு உரிமை இல்லை. செயலுக்கான பலன்களை கொடுப்பது நீ அல்ல. மேலும், உனக்கான கடமைகளை ஆற்றாமல் இருக்கவும் கூடாது" என்று கிருஷ்ணர் கூறினார்
34. இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 55	உள்ளத்து உதிக்கும் ஆசை எல்லாம் கிள்ளி எறிந்தோன் தன்னில்தான் வள்ளல் இன்பம் காண்கின்றோன் அவனே ஞானி ஸ்திதப்ரஜ்ஞன்	"அர்ஜுனா! தனது உள்ளத்தில் ஏற்படும்ஆசைகள் எல்லாம் மனிதன் எப்போது முற்றிலும் துறக்கிறானோ, அப்பொழுதுதான் ஆத்ம இன்பத்தை அடைகிறான். அவனே எதற்கும் கலங்காத மனமுடைய ஸ்திதப்ரக்ஞன், அதாவது உள் சமநிலை உடையவன் என்று அழைக்கப்படுவான்
35. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 56**	துன்பம் வருங்கால் துடியாதான் இன்பம் கண்டும் மயங்காதான் ஆசை அச்சம் சினமற்றோன் அவனே பெரிய நிறைஞானி	"அர்ஜுனா! எவன் ஒருவன் துன்பம் வரும்போது கலங்குவதில்லையோ, இன்பம் வரும் போது அதில் மயங்குதில்லையோ, ஆசை, பயம், கோபம் ஆகிவற்றை எவன் துறக்கிறானோ... அவனே அறிவு பெற்றநிறை ஞானி ஆவான்" என்று கிருஷ்ணர் கூறினார்
36. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 58**	ஆமை உறுப்பை ஆளுதல் போல் ஐம்பொறி ஆளும் ஆற்றலுடன் புலனை வென்ற மனத்தினனே அறிவு நிலைத்த நிறைஞானி	"ஆமை தனக்கு தீமை ஏற்படும் போது எவ்வாறு உறுப்புகளை ஓட்டுக்குள் எடுத்துக் கொள்கிறதோ , அதுபோன்று ஐம்புலனையும் அடக்கித் தீயவற்றில் இருந்து காத்துக் கொள்ள வேண்டும்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்!

37. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 62**	புறப்பொருள் மீதே மனம் ஏகில் அதனைப் பெறவே நினைவாகும் விருப்பின் பெருக்கே பேராசை அடையா விடிலோ சினமே தான்	புலன் நுகர் பொருள்களை சிந்தித்துக் கொண்டிருக்கின்ற மனிதனுக்கு அவ் விஷயங்களில் பற்று ஏற்படுகிறது. பற்றிலிருந்து ஆசை உண்டாகிறது. ஆசையிலிருந்து கோபம் உண்டாகிறது' என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
38. **இரண்டாம் அத்தியாயம் ஸாங்கிய யோகம் ஸ்லோகம் 63**	சினத்தால் மதியே மயங்கிடுமே மயங்கிய மதியால் மறப்பு வரும் மறப்பின் விளைவே மதியீனம் மதியீனத்தால் வரும் கேடு	கோபத்தால் அறிவின்மை ஏற்படும். அறிவின்மையால் புத்தி நிலை தடுமாறும், புத்திநிலை தடுமாறுவதால் விவேகம் அழியும். விவேகம் அழிவதனால் மனிதன் தன் நிலையிலிருந்து வீழ்ச்சியடைகிறான்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
39. மூன்றாம் அத்யாயம் கர்மயோகம் ஸ்லோகம் 6	பொறிகளை மட்டும் அடக்கிய ஒருவன் மனதால் நுகர்வதை இச்சித்தால் அறிவிலியாகிய அவனைத் துன்னடைப் புல்லியன் என்றே தூற்றிடுவார்.	புலன்கள் அனைத்தையும் அடக்கிய ஒருவன் மனதால் ஆசை கொண்டிருந்தால் அதுவும் தீமையானது என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
40. **மூன்றாம் அத்யாயம் கர்மயோகம் ஸ்லோகம் 22**	பார்த்தா! இல்லை எனக்கோர் கடமை உலகம் மூன்றில் என்றறிவாய் யான் எய்தாததும் எய்தவும் ஒன்றில்லை எனினும் செயலே புரிகின்றேன்	பார்த்தா! எனக்கு மூவுலகங்களிலும் செய்ய வேண்டிய கடமை ஒன்றும் இல்லை. அடையதும் எதுவும் இல்லை. எனினும் நான் என் கர்மாவை செய்வதில் ஈடுபட்டுள்ளேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
41. **மூன்றாம் அத்யாயம் கர்மயோகம் ஸ்லோகம் 23**	என்றும் அயர்வே கொள்ளாவண்ணம் யானே கர்மம் செய்யாக்கால் பார்த்தா! பாரில் எங்கும் மாந்தர் எனையே பின்பற்றிடுவார் காண்.	பார்த்தா! என்றும் அயரா வண்ணம் நானே என்னுடைய கர்மயோகத்தை செய்வதால் என்னை பின்பற்றுவோரும் தவறாது அதை செய்வார்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
42. மூன்றாம் அத்யாயம் கர்மயோகம் ஸ்லோகம் 27	இயற்கை விதியால் எங்கும் கர்மம் உளதாம் எனினும் மூடன்தான் ' யானே கர்த்தா' என்றே எண்ணிச் செருக்கால் மோகம் கொள்கின்றான்	பார்த்தா! எல்லா பொருள்களும் எல்லா செயல்களும் ப்ரகிருதியால் (இறை சக்தியால்) செய்யப்படுகிறது. ஆனால் ஆணவத்தால் அறிவிழந்த மூடன் "நானே செய்தேன்" என்று பெருமை கொள்கிறான்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
43. மூன்றாம் அத்யாயம் கர்மயோகம் ஸ்லோகம் 30	கர்மப் பயனை எனக்கே ஆக்கி ஆத்மா தனிலே உளம் வைப்பாய்; ஆசை, அகந்தை அற்றோனாகித் தெளிவாம் மனதால் போர் செய்வாய்	அர்ஜுனா! நீ செய்யும் கர்மத்தின் பலனை எனக்குச் சமர்ப்பித்து விடு. ஆசை, அகந்தை இல்லாத மனத்தோடு போர் செய்," என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
44. மூன்றாம் அத்யாயம் கர்மயோகம் ஸ்லோகம் : 38	தீயைச் சூழும் புகையே போலப் பளிங்கை மூடும் கறையே போல் கருவைக் கருப்பை மறைத்தல் போல அறிவை ஆசை மூடிடுமே	எவ்விதம் புகையால் நெருப்பும் அழுக்குகளால் கண்ணாடியும் கருப்பையினால் கருவும் மறைக்கப்படுகிறதோ, அவ்விதமே ஆசையால் ஞானம் மறைக்கப்பட்டு இருக்கிறது" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
45. **மூன்றாம் அத்யாயம் கர்மயோகம் ஸ்லோகம் 42**	புலனோ உடலின் வலிதாம் என்பர் புலனில் பெரிது மனமே யாம் மனத்தில் பெரிது மாபெரும் புத்தி புத்தியின் மேலாம் ஆத்மாதான்	புலன்கள் உடலைக் காட்டிலும் மேலானவை. அவை உயர்ந்தவை; பலமுள்ளவை; நுண்ணியவை. இந்தப் புலன்களைக் காட்டிலும் மனம் மேலானது. மனத்தைக் காட்டிலும் புத்தி மேலானது. புத்தியைக் காட்டிலும் ஆத்மா மேலானது" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்
46. மூன்றாம் அத்யாயம் கர்மயோகம் ஸ்லோகம் 43	தடந்தோள் வீரா! அறிவின் மேலாம் ஆத்ம ஒளியால் தன்வயமாய் ஆசை உருவாம் வெல்லுதற்கரிய பாசப் பகையை அழித்திடுவாய்	"அர்ஜுனா! புத்தியை காட்டிலும் ஆத்மா மேலானது என்ற உண்மையை உணர்ந்து புத்தியினால் மனதை வசப்படுத்தி பாசம் என்ற மாயையை வென்றிடுவாய்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
47. நான்காம் அத்தியாயம் ஞான-கர்ம துறவு யோகம் ஸ்லோகம் 7	தர்மத்திற்கே குறை வரும்போதும் அதர்மம் ஓங்கி எழும்போதும் அப்பொழுதெல்லாம் பாரத வீரா! இப்புவியில் யான் தோன்றுகிறேன்	பொருள்: "அர்ஜுனா! எப்பொழுதெல்லாம் இந்த பூமியில் தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்குகிறதோ, அப்பொழுதெல்லாம் இந்த பூமியில் தர்மத்தை நிலைநாட்ட நான் அவதரிக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்
48. **நான்காம் அத்தியாயம் ஞான கர்ம துறவு . யோகம் ஸ்லோகம் 8**	அறவோர் தம்மைக் காத்தற் கென்றும் தீயோர் தம்மை அழித்திடவும் தர்மம் தனையே நிலைநாட்டிடவும் யுகங்கள் தோறும் வருகின்றேன்	பொருள்: தர்மம் செய்பவர்களை காப்பதற்காகவும், அதர்மம் செய்பவர்களை அழிப்பதற்காகவும், தர்மத்தை நிலை நாட்டிடவும், ஒவ்வொரு யுகங்கள் தோறும் நான் அவதரிக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.

49. நான்காம் அத்தியாயம் ஞான கர்ம துறவு யோகம் ஸ்லோகம் 11	எங்ஙனம் யாவர் எனை வேண்டுவரோ அவ்வா(று) அவர்க்கு அருள் செய்வேன்; என்வழி தனையே உலகில் மாந்தர் யாண்டும் தொடர்தல் இயல்பாமே	அர்ஜுனா! எந்த பக்தர்கள் என்னை எவ்விதம் வழிபடுகிறார்களோ நானும் அவர்களை எவ்வாறு அணுகுகிறேன். ஏனென்றால், எல்லா மனிதர்களும் பல்வேறு விதங்களிலும் என்னுடைய வழியை பின்பற்றுகிறார்கள்
50 . நான்காம் அத்தியாயம் ஞான-கர்ம துறவு யோகம் ஸ்லோகம் 13	நால்வகை வருணம் உலகில் தந்தேன் குண கர்மத்தின் வகையாலே யானே அதற்குக் கர்த்தா எனினும் அமரன், வினையிலி, யான் ஆவேன்.	வேதியர், வேந்தர், வணிகர் வேளாளர் என்ற நான்கு சமூக குணங்களும் கர்மங்களை ஒட்டிய பிரிவுகளாக என்னால் படைக்கப்பட்டது. இங்ஙனம் அந்த படைப்பு முதலிய செயல்களை செய்யும் கர்த்தாவாக நான் இருந்த போதிலும் உண்மையில் நான் கர்த்தா அல்ல என்று நீ அறிவாயாக" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
51.. **நான்காம் அத்தியாயம் ஞான-கர்ம துறவு யோகம் ஸ்லோகம் 34**	பணிந்தும், கேட்டும், சேவை செய்தும் முறையாய் அதனை அறிந்திடுவாய் இறை ஒளி கண்ட ஞானியர் உனக்கு ஞான அமுதை அருளிடுவார்	அர்ஜுனா, ஞானத்தை ஞானிகளிடம் இருந்து அறிந்து கொள். அவர்களை சாஷ்டாங்கமாக தரையில் விழுந்து வணங்குவதாலும்,சேவை செய்வதாலும் கபடம் இல்லாமல் நேர்மையாக கேள்வி கேட்பதாலும், ஞானிகள் உனக்கு அந்த ஞானத்தை உபதேசிப்பார்கள்" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்.
52. ஐந்தாம் அத்தியாயம் சன்யாச யோகம் ஸ்லோகம் 18	பணிவொடு அறிவுள அந்தணரிடமும் ஆவினம், யானை நாயிடமும் புன் புலாலை உண்போனிடமும் சம நோக்குடையார் ஞானியரே.	"தத்துவ ஞானிகள் ஆத்மவான பகவன் எல்லாரிடமும் சமமாக விளங்குகிறார் என்று நோக்கு உடையவர்கள். அவர்கள் வேதம் படித்த அந்தணர்களிடமும் பசுவிடமும் யானையிடமும் நாயிடமும் தீய செயல்கள் செய்பவரிடம் கூட சமநோக்கு உள்ளவர்களாக ருப்பார்கள்" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்.
53. ஐந்தாம் அத்தியாயம் சன்யாச யோகம் ஸ்லோகம் 22	ஐம்பொறி வழியே அடையும் இன்பம் துன்பத்திற்கே வித்தாகும் ஆதி அந்தம் உளதாம் அதனை ஞானியோ விரும்பான் கௌந்தேயா.	அர்ஜுனா! ஐம்புலன்களால் அடையும் இன்பம் உலகப் பற்று உடையவர்களுக்கு சுகமாக தோன்றும். ஆனால் அவை நிச்சயமாக துன்பத்திற்கு காரணமாக இருக்கும். இந்த இன்பம் நிரந்தரமானவை அல்ல இதனால் ஞானிகள் அவற்றை கண்டு இன்புறுவதில்லை" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்.
54. ஐந்தாம் அத்தியாயம் சன்யாச யோகம் ஸ்லோகம் 29	தவத்தொடு யாகம் துய்ப்போன் யானே, உலகுக் கெல்லாம் ஈசுவரனே எல்லா உயிர்க்கும் தோழன் நானே என அறிவோனே சாந்தியுளான்.	அர்ஜுனா! என்னை உணர்ந்தவன், யாகத்தின் பலனை அடைவது நான் என்றும்; உலகிற்கு ஈஸ்வரனாக இருப்பவன் நான் என்றும்; எல்லா உயிர்களுக்கும் தோழனாக இருப்பவன் நான் என்றும் அறிந்திருக்கிறான்" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்
55. ஆறாம் அத்தியாயம் தியான யோகம் ஸ்லோகம் 5:	தன்னைத் தானே மேலோன் ஆக்குக தனக்கே இழிவைத் தேடற்க தனக்குத் தானே நண்பன் போன்றே தனக்குத் தானே பகையும் ஆம்.	"அர்ஜுனா! ஒருவன் தமது செயலாலும் எண்ணத்தாலும் தன்னைத்தானே உயர்ந்தவன் ஆக்கிக் கொள்ள வேண்டும். தனது தீய செயல்கள் தனக்கு இழிவைத் தரும் என்று உணர வேண்டும்" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்
56. ஆறாம் அத்தியாயம் தியான யோகம் ஸ்லோகம் 9	நேயர், நண்பர், பகைவர், இதரர் நடுவர், வெறுப்போர், பந்துக்கள் ஸாத்விகர், பாவியர் என்பாரிடமும் சமமதி உடையோன் மேலோனாம்.	தன்னலம் கருதாது நண்பன், பகைவன், ஒரு சார்பில் இருப்பவன், நடுநிலையாக நிற்பவன், வெறுக்கத்தக்கவன், உறவினர், நல்லவன் ஆகிய எல்லோரிடத்திலும் சமமாக மரியாதை கொண்டுள்ளவன் சிறந்தவன் ஆகிறான்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
57. ஆறாம் அத்தியாயம் தியான யோகம் ஸ்லோகம் : 34	கண்ணா! மனமோ அசையும் நிலையோடு கலங்கும் நிலையது, பலமுள்ளது: திடமும் வாய்ந்த மனத்தை அடக்கல் காற்றைக் கட்டுதல் போல் அரிது.	கண்ணா! இந்த மனம் எதிலும் நிலைக்காமல் அலையும் தன்மை உடையது. புலன்களை மிகவும் கலக்கும் தன்மை உடையது. திடமானது: வலிமை பொருந்தியது: ஆகவே அதை அடக்குவது என்பது காற்றை நிறுத்துவது போன்று மிகவும் கடினமானது" என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறினார்.
58. ஆறாம் அத்தியாயம் தியான யோகம் ஸ்லோகம் : 35	தடந்தோள் வீரா! இதிலேன் ஐயம்? மனமோ அடங்காக் குணமுளதே பயிற்சியினாலும் வைராக்கிய தொடும் கௌந்தேயா! அதைக் கட்டிடலாம்.	மனத்தை வசப்படுத்த இயலாதவனால் யோகம் அடைய முடியாது. ஆனால், மனத்தை அடக்கி, முயற்சியுள்ள மனிதன் பயிற்சியினால் யோகத்தை அடைவது சாத்தியமானது: எளிது!" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்.
59. ஏழாம் அத்தியாயம் ஞான விஞ்ஞான யோகம் ஸ்லோகம் 2	ஞானம் தன்னை விஞ்ஞானத் தொடு சொல்வேன் உனக்குப் பூரணமாய்- அதனை அறிந்தால் மீண்டும் அறிந்திட இங்கே யாதும் இல்லையே.	எதை அறிந்து கொண்டபின் இவ்வுலகில்' மேலும் தெரிந்து கொள்ள வேண்டியது வேறு ஒன்றும் மீதம் இருக்காதோ, (அதை, அதாவது) விஞ்ஞானத்துடன் கூடிய இந்தத் தத்துவ ஞானத்தை முழுமையாக நான் உனக்குச் சொல்வேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.

60. **ஏழாம் அத்தியாயம் ஞான விஞ்ஞான யோகம் ஸ்லோகம் 3**	ஆயிரம் ஆயிரம் மாந்தர்க்குள்ளே யாரோ சிலரே சித்தி பெற முயல்வார் அந்த நல்லோருள்ளும் யாரோ ஒருவன் எனை அறிவான்.	ஆயிரக்கணக்கான மனிதர்களில் யாரோ ஒருவன் என்னை அடைவதற்காக முயல்கிறான். சாதனை புரிகிறான்.அவ்விதம் முயல்கின்ற யோகிகளிலும் கூட என்னையே மேலான கதியாகக் கொண்ட யாரோ ஒருவன்தான் என்னைத் தத்துவரீதியாக உள்ளபடியே அறிகிறான்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
61. ஏழாம் அத்தியாயம் ஞான விஞ்ஞான யோகம் ஸ்லோகம் 4	வானாய் மண்ணாய்க் காற்றாய்த் தீயாய் நீராய் மனமாய் புத்தியொடு அகங்காரமுமாய் என் இயல்பு இங்கே எண்குணப் பிரிவாய் இயங்குமே.	பொருள்: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய எனது இந்தப் பிரகிருதி எட்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிம் கூறினார்.
62. **ஏழாம் அத்தியாயம் ஞான விஞ்ஞான யோகம் ஸ்லோகம் 7**	தனஞ்ஜய! என்னில் மேலாம் பொருளாய் அன்னிய தொன்றும் இல்லையே நூலில் மணிபோல் வையம் முழுதும் என்னில் இணையப் பெற்றதே.	அர்ஜுனா! என்னைக் காட்டிலும் வேறொன்றும் உயர்ந்ததில்லை. இவ்வுலகமனைத்தும் நூலில் கோர்க்கப்பட்ட மணிகளைப் போல என்னிடம் கோர்க்கப்பட்டுள்ளன" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
63. ஏழாம் அத்தியாயம் ஞான விஞ்ஞான யோகம் ஸ்லோகம் 25	யோகமாயை எனைச் சூழ்வதனால் எட்டேன் எல்லாரறிவுக்கும் பிறப்போ அழிவோ இல்லா என்னை மூட உலகோ அறியாது.	என்னுடைய யோகமாயையால் மறைக்கப்பட்டுள்ள நான் எல்லோருக்கும் புலப்படுவதில்லை. இந்த அறிவற்ற மனித சமுதாயம் என்னை பிறப்பற்றவன் என்றும் அழிவற்ற பரம் பொருள் என்றும் அறிவதில்லை. நான் பிறப்பு இறப்பு உள்ளவன் என்றே எண்ணுகிறது ' என்று கிருஷ்ணன் அர்ஜுனனிடம் கூறினார்..
64. ஏழாம் அத்தியாயம் ஞான விஞ்ஞான யோகம் ஸ்லோகம் 26	மறைந்த உயிரோடு இருப்பன யாவையும் இனிமேல் வந்திடும் உயிர்களையும் யானோ அர்ஜுனா! அனைத்தும் அறிவேன் எனினும் எனையே அறிவார் இல்லை.	அர்ஜுனா! முன்பே உயிர் வாழ்ந்து காலமாகிய உயிர்களையும், இப்பொழுது உயிரோடு இருப்பவர்களையும், அவ்வாறே இனி தோன்றப் போகிற எல்லா உயிர்களையும் நான் அறிவேன்.. ஆனால் சிரத்தையும் பக்தியும் இல்லாத எந்த மனிதனும் என்னை அறிவதில்லை" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
65. ஏழாம் அத்தியாயம் ஞான விஞ்ஞான யோகம் ஸ்லோகம் 28	புண்ணிய வினையால் பாவம் வென்றோர் இருமை மயக்கம் அற்றோர்கள் திட விரதத்தொடு முயல்வோராகி எனையே பரமாய் வழிபடுவார்.	பலன் கருதாது சிறந்த செயல்களை புரிகின்ற, எந்த மனிதர்களுடைய பாவம் கரைந்து விட்டதோ, எந்த விருப்பு வெறுப்புகளால் உண்டாகிற மயக்கத்தில் இருந்து விடுபட்டஉறுதியான உள்ளத்துடன் கூடிய பக்தர்கள் இருக்கிறார்களோ அவர்களே என்னை அறிகிறார்கள்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
66. **எட்டாம் அத்தியாயம் அக்ஷர பிரம்ம யோகம் ஸ்லோகம் 14:**	பார்த்தா! என்னை அந்நிய நினைவற ஓயா தென்றும் நினைப்போராம் ஓர் நிலையுள்ள யோகியர் தமக்கு எளிதாய் யானே வசமாவேன்.	அர்ஜுனா! எவன் ஒருவன் வேறு சிந்தனையற்று எப்போதும் என்னை விடாமல் நினைக்கிறானோ, அவனே யோகி ஆகிறான். அந்த நிலை அடைந்தவன் தான் என்னை எளிதில் அடைய முடியும்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
67.எட்டாம் அத்தியாயம் அக்ஷர பிரம்ம யோகம் ஸ்லோகம் 16	வானுலகம் முதல் எல்லா உலகும் அர்ஜுனா! மறுபிறப்புள்ளவையே; எனினும் பார்த்தா! எனை அடைந்தோர்க்கு மறுபிறப் பென்றும் இல்லையே.	அர்ஜுனா! பிரம்மலோகம் வரை உள்ள எல்லா உலகங்களும் அழிந்து மீண்டும் உண்டாகும் தன்மை உடையன. ஆனால், குந்தியின் புதல்வனே! என்னை அடைந்த பின்னர் யவருக்கும் மறுபிறவி என்பதே கிடையாது" என்று கிருஷ்ணர் 'அர்ஜுனனிடம் கூறினார்
68.எட்டாம் அத்தியாயம் அக்ஷர பிரம்ம யோகம் ஸ்லோகம் 22	யாருள் உயிர்கள் நிலை பெற்றிடுமோ யாரால் யாவும் நிறைவுறுமோ பரம்பொருளாகிய அப் பரமாத்மா அனன்ய பக்திக்(கு) அகப்படுவான்.	"அர்ஜுனா! இந்த உலகில் உள்ள உயிர்கள் யாவும் யாரால் நிலைத்து நிற்கிறதோ! இந்தப் பிரபஞ்சம் முழுவதும் எது நிறைந்திருக்கிறதோ! அந்த பரம்பொருளாகிய பரமாத்மாவை தூய பக்தியுடையவர்களால் மட்டுமே அறிய முடியும்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
69.ஒன்பதாம் அத்தியாயம் ராஜவித்தை ராஜமறை யோகம் ஸ்லோகம் 2:	ராஜவித்தை ராஜ மறை இது தூய்மை தருவது உத்தமமே தெளிவாய்க் காணும் அறநெறி இதுவே செய்தற் கெளிதாம், அழிவிலதே	"அர்ஜுனா! இந்த விஞ்ஞானத்துடன் கூடிய ஞானம் அனைத்து வித்தைகளுக்கும் அரசு: போற்றப்பட வேண்டியவைகளில் சிறந்தது: மிகப் புனிதமானது: கண்கூடாக உணர்வதற்குரியது: தர்ம நெறிக்கு உட்பட்டது: மிகவும் எளிதானது: மேலும் அழிவற்றது" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்
70. ஒன்பதாம் அத்தியாயம் ராஜவித்தை ராஜமறை யோகம் ஸ்லோகம் 6:	எங்கும் இயங்கும் மாபெரும் காற்று ஆகாயத்தில் அடங்கல் போல் ஐம்பெரும் பூதத் தொகுதிகள் யாவும் என்னுள் ஒடுங்கும் என்றிவாய்	"எங்கும் வீசுகின்ற பெருங்காற்று எவ்வாறு ஆகாயத்தில் எப்போதும் உள்ளதோ அவ்வாறே எல்லா உயிரினங்களும் என் சங்கல்பத்தில் உண்டாவதால், அவைகள் எப்போதும் என்னிடம் உள்ளன, என்று அறிந்து கொள்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறுகிறார்.

71. **ஒன்பதாம் அத்தியாயம் ராஜவித்தை ராஜமறை யோகம் ஸ்லோகம் 26**	இலையோ மலரோ கனியோ நீரோ இனிதாய் எனக்கே உவப்போடு அளிப்போனாம் அப்புனிதன் நல்கும் அமுதை ஏற்று மகிழ்வோன் யான்.	அர்ஜுனா! எவன் ஒருவன் எந்த பிரதிபலனும் எதிர்பாராமல் தூய பக்தியோடு எனக்கு இலை, மலர், பழம், நீர், முதலியவற்றை அர்ப்பணம் செய்கிறானோ, அவன் கொடுக்கும் அந்த அன்பு நிறைந்த காணிக்கையை நான் பிரியத்துடன் ஏற்றுக்கொள்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
72. .**ஒன்பதாம் அத்தியாயம் ராஜவித்தை ராஜமறை யோகம் ஸ்லோகம் 27**	கௌந்தேயா! நீ எதைச் செய்தாலும் எதை உண்டாலும் வேட்டாலும் எதை ஈந்தாலும், எத்தவம் செயினும் எனக்கே அர்ப்பணம் எனச் செய்வாய்.	குந்தியின் மைந்தனே! நீ எந்த செயலை செய்கிறாயோ, எதை உண்கிறாயோ, எதை ஹோமம் செய்கிறாயோ, எதை தானமாக அளிக்கிறாயோ, எந்த தவத்தை செய்கிறாயே, அவை அனைத்தையும் எனக்கே அர்ப்பணம் செய்து விடு" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
73. **பத்தாம் அத்தியாயம் விபூதியோகம் ஸ்லோகம் 20**	குடாகேசா! அனைத்து உயிருளும் உறையும் ஆத்மா யானே தான் மேலும் யானே எல்லாவுயிர்க்கும் முதலும் நடுவும் முடிவாவேன்.	அர்ஜுனா! நான் எல்லா உயிரினங்களின் உள்ளத்திலும் ஆத்மவாக இருக்கிறேன். மேலும் உயிரினங்களுக்கு எல்லாம் ஆதியாகவும் நடுவாகவும் முடிவாகவும் நானே இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
74. **பத்தாம் அத்தியாயம் விபூதியோகம் ஸ்லோகம் 21**	ஆதித்தியருள் யாளே விஷ்ணு ஜோதியில் கதிரோன் ரவியானே மருத்துக்களிலே மரீசி யானே விண் மீனுள்ளே வெண்ணிலா.	நான் அதிதியின் புதல்வர்கள் பன்னிருவருள் விஷ்ணுவாகவும் ஒளிர்பவைகளில் சூரியன் ஆகவும் 49 வாயு தேவர்களில் தேஜஸ் ஆகவும் நட்சத்திரங்களில் அவற்றின் தலைவனான சந்திரன் ஆகவும் இருக்கின்றேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
75. **பத்தாம் அத்யாயம் விபூதி யோகம் ஸ்லோகம் 2**3:	உருத்திரருக்குள் சங்கரன் யானே குபேரன் யஷர் அரக்கரிலே எட்டு வசுக்களில் அக்கினி யானே, மலைகளிலே யான் மேரு மலை	அர்ஜுனா! நான் ருத்ரர்கள் 11 பேரில் பரமசிவனாக இருக்கிறேன். யக்ஷ-ராக்ஷஸதர்களுள், செல்வத்திற்கு அதிபதியான குபேரன் ஆகவும், வசுக்கள் எண்மருள் அக்னியாகவும், சிகரமுடைய மலைகளுள் சுமேரு மலையாகவும் இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
76. **பத்தாம் அத்தியாயம் விபூதி யோகம் ஸ்லோகம் 24**	புரோகிதர்க்குள்ளே பார்த்தா யானே பிருஹஸ்பதி என நீ அறிவாய் சேனைத் தலைவரில் ஸ்கந்தன் யானே நீர் நிலைக்குள்ளே சாகரம்	அர்ஜுனா! புரோகிதர்களுள் முக்கியமானவரான பிரகஸ்பதி என்று என்னை அறிந்து கொள். நான் படைத்தலைவர்களில் ஸ்கந்தனாக இருக்கிறேன். நீர் நிலைகளில் சமுத்திரமாக இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
77. **பத்தாம் அத்தியாயம் விபூதி யோகம் ஸ்லோகம் 25**	மகர்ஷிகளுள்ளே பிருகுமுனி யானே; சொல்லில் பிரணவ ஓங்காரம் யாகங்களிலே ஜபம் ஆகின்றேன் நிலைத்த பொருளில் இமயமலை	அர்ஜுனா! நான் மகரிஷிகளில் பிருகு மகரிஷியாகவும் சொற்களில் ஓர் எழுத்தான ஓங்காரமாகவும் உள்ளேன். யாகங்களில் செய்யப்படுகின்ற ஜபமாக இருக்கின்றேன் அசையா பொருள்களில் இமயமலையாகவும் இருக்கின்றேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
78. **பத்தாம் அத்யாயம் விபூதி யோகம் ஸ்லோகம் 28:**	படைக் கருவிக்குள் வஜ்ராயுதம் யான் பசுக்களில் காமதேனுவே யான் படைப் போருள்ளே மன்மதன் யானே ஸர்ப்பங்களிலே வாசுகி யான்	அர்ஜுனா! நான் ஆயுதங்களில் வஜ்ராயுதமாகவும், பசுக்களில் காமதேனுவாகவும் உள்ளேன். சாஸ்திர முறையில் மகப்பேற்றுக்கு காரணமான மன்மதனாகவும் இருக்கிறேன். சர்ப்பங்களில் சர்ப்ப ராஜாவான வாசுகியாகவும் இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
79. **பத்தாம் அத்யாயம் விபூதி யோகம் ஸ்லோகம் 31:**	புனிதம் தருவதில் காற்றும் யானே படை அணிவோரில் இராமன் யான் மீனுள் வலியுள மகரம் யானே ஓடும் நதியில் கங்கை யான்	""அர்ஜுனா! நான் தூய்மைப்படுத்துபவைகளில் காற்றாகவும் ஆயுதம் தாங்கிவர்களில் ஸ்ரீ ராமனாகவும் இருக்கிறேன். மீன் இனங்களில் முதலையாகவும் நதிகளில் கங்கையாகவும் இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
80. **பத்தாம் அத்யாயம் விபூதி யோகம் ஸ்லோகம்:32**	படைப்புப் பொருளில் முதலொடு ஈறும் நடுவும் என்றும் ஆகின்றேன் கலைகளிலே யான் ஆத்ம கலைதான் வாதிடுவோரின் வாதம் யான்.	அர்ஜுனா! படைப்புகளின் ஆரம்பமாகவும் முடிவாகவும் நடுவாகவும் நான் இருக்கிறேன். வித்தைகளில் ஆத்ம வித்தையாகவும், வாதம் செய்பவர்களுக்கு உதவும் தத்துவமாகவும் நானே இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
81. **பத்தாம் அத்யாயம் விபூதி யோகம் ஸ்லோகம் :34**	யாவும் அழிக்கும் மரணம் யானே தோன்றும் பொருளின் தோற்றம் யான் மகளிர்க்(கு) ஏற்றபுகழ், சீர், தண்சொல் உரன், பொறை, அறிவும், நினைவும்யான்	அர்ஜுனா! நான் எல்லாவற்றையும் அழிக்கின்ற மரண தேவதையாகவும், இனி உண்டாகப் போகின்றவற்றிற்குக் காரணமாகவும், மாதர்களுள் கீர்த்தி தேவியாகவும், ஸ்ரீதேவியாகவும், வாக் தேவியாகவும், ஸ்ம்ருதி தேவியாகவும், மேதா தேவியாகவும், த்ருதி தேவியாகவும், க்ஷமா தேவியாகவும் இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்

82. **பத்தாம் அத்யாயம் விபூதி யோகம் ஸ்லோகம்:35** .	ஸாமங்களிலே பிருஹத் ஸாமம் யான் சந்தங்களில் யான் காயத்ரீ மாதங்களிலே மார்கழி யானே, ருதுக்களிலே யான் வசந்தம்தான்	அர்ஜுனா! வேதப் பகுதிகளுள் சாம வேதப் பகுதியாகவும், சந்தங்களுள் காயத்ரீ என்ற சந்தமாகவும் நான் இருக்கிறேன். மாதங்களுள் மார்கழியாகவும், பருவங்கள் ஆறினுள் வசந்த ருதுவாகவும் நான் இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
83. **பத்தாம் அத்யாயம் விபூதி யோகம் ஸ்லோகம்:36** .	வஞ்சகர் தமது சூதும் யானே தேஜஸ்விகளின் ஒளியும் யான் முயற்சி வெற்றி யாவும் யானே, நல்லோர் பண்பாம் ஸத்துவம் யான்	அர்ஜுனா! நான் வஞ்சகர்களுள் அவர்களது சூதாட்டமாகவும், திறமைபடைத்தவர்களுடைய திறமையாகவும் இருக்கிறேன். நான் வெற்றி கொள்பவரது வெற்றியாக இருக்கிறேன். தீர்மானம் செய்யும் சக்தி உள்ளவர்களின் தீர்மானமாகவும், சத்துவ குணம் படைத்தவர்களிடம் சத்துவ குணமாகவும் இருக்கிறேன்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
84. **பத்தாம் அத்யாயம் விபூதி யோகம் ஸ்லோகம்:39** .	இன்னும் கேளாய் உயிர்கட்கெல்லாம் எதுவோ வித்து அதுவே யான்- என்னில் வேறாய் வையத்துள்ளே ஒன்றும் இல்லை என்றுமே	பொருள்: அர்ஜுனா! எல்லா உயிரினங்களுக்கும் எது விதையோ, அதுவே நான்தான்! ஏனெனில் நானின்றி இயங்கக்கூடிய உயிரினம் எதுவும் இல்லை!" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
85. **பதினோராம் அத்தியாயம் விஸ்வரூப தரிசன யோகம் ஸ்லோகம்:3**	பரமேஸ்வரா! நீர் உம்மைப் பற்றிச் சொன்னவை யாவும் உண்மையே- புருஷோத்தம! நும் ஈஸ்வர வடிவைக் காணவே யானும் விழைகின்றேன்	பரமேஸ்வரனே! நீங்கள் உங்களைப் பற்றி எவ்வாறு கூறினீர்களோ அது அப்படியே உண்மை தான் புருஷோத்தமா! உங்களுடைய ஞானம், ஈஸ்வரத்தன்மை, சக்தி, பலம், வீரியம், தேஜஸ் இவற்றோடு கூடிய ஈஸ்வர ரூபத்தை கண்கூடாக காண்பதற்கு விரும்புகிறேன்" என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறினார்
86. **பதினோராம் அத்தியாயம் விஸ்வரூப தரிசன யோகம் ஸ்லோகம்:8**	ஆனால் நீ உன் ஊனக்கண்ணால் என்னைக் காண்பதோ இயலாது- ஞானக் கண்ணைத் தந்தேன் எனது ஈஸ்வர யோகம் தன்னைப் பார்.	அர்ஜுனா நீ உன் ஊனக் கண்ணால் என்னை பார்க்க முடியாது. ஆகையால் உனக்கு தெய்வீகமான ஞான பார்வையை தருகிறேன். என்னுடைய தெய்வீகத்தன்மை பொருந்திய யோக சக்தியை பார் " என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
87. **பதினோராம் அத்தியாயம் விஸ்வரூப தரிசன யோகம் ஸ்லோகம்:15**	தேவா! நும்திரு மேனியிலே யான் தேவர் குழாத்தைக் காண்கின்றேன் உயிர்த் திரளோடு மலரவன், ரிஷிகள் தேவ ஸர்ப்பமும், ஈஸ்வரனும்	தேவனே! நான் உங்களுடைய திருமேனியில் எல்லா தேவர்களையும், எல்லா பிராணி வர்க்கங்களையும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்ம தேவனையும், மகாதேவனையும், எல்லா ரிஷிகளையும் தெய்வீகமான சர்ப்பங்களையும் பார்க்கிறேன்" என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறினார்
88. **பதினோராம் அத்தியாயம் விஸ்வரூப தரிசன யோகம் ஸ்லோகம்:16**	விஸ்வேஸ்வர! நும் விஸ்வ உருவில் பற்பல கரமும் வயிறு களும் பற்பல முகத்தொடு பற்பல கண்கள் அனந்த உருவில் காண்கின்றேன்; ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா விஸ்வரூபா! நும் உருவில் அடியோ இடையோ முடியோ எங்கும் காணேன் நாதா ஜெகதீசா	அகில லோக நாயகனே! உங்களை எண்ணிலடங்காத கைகள் வயிறுகள் முகங்கள் கண்கள் கொண்டதாகவும் எண்ணற்ற உருவங்கள் ஏற்றவர் ஆகும் எல்லா பக்கங்களிலும் பார்க்கின்றேன். அகிலாண்ட ரூபனே! உங்களுடைய முடிவான எல்லையை பார்க்கவில்லை நடுப்பகுதியையும் பார்க்கவில்லை மேலும் ஆரம்பத்தையும் பார்க்கவில்லை" என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறினான்
89. **பதினோராம் அத்தியாயம் விஸ்வரூப தரிசன யோகம் ஸ்லோகம்:17**	ஆழியும் கதையும் மகுடமும் தாங்கி எக்காலத்தும் ஒளி உருவாய் எங்கும் ஒளி வீசும் ஜோதிக் கனலாய் இறைவா! உம்மை காண்கின்றேன். காணுதற் கரிதாம் காட்சியாக் கொளுத்தும் தீபோல் சூரியன் போல் அளந்தற் கரிய அப்பா உம்மை எங்கும் ஒளியாய் காண்கின்றேன்.	கேசவா! உங்களை கிரீடம் தரித்தவராகவும், கதை சக்கரத்தோடு கூடியவராகவும், எங்கும் பிரகாசிக்கின்ற ஒளிப்பிழம்பாகவும், கொழுந்து விட்டு எரிகின்ற சூரியனுடையது போன்ற ஒளியுடன் கூடியவராகவும், பார்க்க கூசுகிறதும் எங்கும் நிறைந்ததுமான அளவிட முடியாத ஸ்வருஸபத்தை உடையாராகவும் பார்க்கின்றேன்" என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறினான்

90.பதினோராம் அத்தியாயம் விஸ்வரூப தரிசன யோகம் ஸ்லோகம்: 19	தேவ தேவா! முழுமுதல் பொருளே! பயங்கர மூர்த்தி! நீர் யாரோ? பணிவோடும்மை வணங்கிக் கேட்டேன் அருளால் என்னைத் தெளிவிப்பீர் உம(து) இச்செயலின் மர்மம் என்ன என்றறியாதே தவிக்கின்றேன் உண்மை அறியும் விருப்பம் மிக்க என்னைத் தேற்றி அருள் செய்வீர்.	தேவர்களில் சிறந்தவரே! பயங்கர வடிவுள்ள நீங்கள் யார்? என்னிடம் தயவு செய்து கூறுங்கள். உங்களுக்கு நமஸ்காரம். நீங்கள் அருள் புரியுங்கள். ஆதிபுருஷரான உங்களை நன்கு தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனெனில், உங்களுடைய செயலை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை." என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறினார்
91. **பதினோராம் அத்தியாயம் விஸ்வரூப தரிசன யோகம் ஸ்லோகம்: 31**	ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா அனந்த வீரியம் உள்ளவர் நீர் எண்ணிலடங்காக் கைகளை உடையீர் மதியும் ரவியும் கண்ணானீர்; கொளுத்தும் தீயினை வாயாய் உடையீர் தம்சுய ஒளியால் உலகினையே முற்றும் எரிக்கும் ஒளிப்பிழம்பானீர் இவ்வாறும்மைக் காண்கின்றேன்	உங்களை முதல், நடு, முடிவு அற்றவராகவும், எல்லையற்ற திறமை கொண்டவராகவும், எண்ணற்ற தோள்கள் உடையவராகவும், சந்திரன், சூரியன் -இவர்களைக் கண்களாகக் கொண்டவராகவும், கொழுந்துவிட்டெரியும் தீ போன்ற வாய் உடையவராகவும், தம்முடைய வெப்பத்தினால் இந்த உலகத்தை வாட்டுபவராகவும் பார்க்கிறேன்" என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறினார்
92. **பதினோராம் அத்தியாயம் விஸ்வரூப தரிசன யோகம் ஸ்லோகம்: 32**	உலகம் யாவையும் அழித்திடவல்ல ஊழிக் காலம் யானே தான் அழிவுத் தொழிலை மேற் கொண்டுள்ளேன் அவனியை இங்கே அழிக்கின்றேன் போரில் நீயே இல்லா விடிலும் எதிராய் நிற்கும் பகைவரிலே அணி அணியாக நிற்கும் வீரர் ஆரும் எஞ்சா(து) அழிந்திடுவார்.	உலகங்கள் அனைத்தையும் அழிக்கின்ற, பெருகி வளர்ந்துள்ள மகாகாலனாக இருக்கிறேன். இப்பொழுது உலகங்கள் எல்லாவற்றையும் ஸம்ஹாரம் செய்வதற்கு முனைந்திருக்கிறேன். எந்தப் போர் வீரர்கள் எதிரிப்படைகளில் இருக்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் நீ போர் புரியாமல் இருப்பினும் இருக்கப் போவதில்லை-அதாவது இவர்கள் எல்லோரும் போரில் அழிந்தே போவார்கள்"என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
93. **பதினோராம் அத்தியாயம் விஸ்வரூப தரிசன யோகம் ஸ்லோகம்: 40**	அளவிலா வீரியம் தாங்கிய நாதா! அனந்த மகிமை கொண்டவரே! முன்னும் பின்னும் எல்லா இடமும் உம்மைப் போற்றித் தொழுகின்றேன்; எங்கும் நிறைந்த பரம்பொருள் ஆனீர் யாவும் நீரே எதிலும் நீர் எல்லாம் ஆன முழுமுதல் நாதா எ ங்கும் உமக்கு நமஸ்காரம்	அளவற்ற திறமை உடையவரே உங்களுக்கு முன்பிருந்தும் பின்பிருந்தும் நமஸ்காரம். அனைத்துமானவரே! உங்களுக்கு எல்லா புறங்களிலிருந்தும் நமஸ்காரம். அளவற்ற பராக்கிரம் உடைய நீங்கள் உலகம் முழுவதும் வியாபித்து இருக்கிறீர்கள். நீங்களே அனைத்து வடிவாகவும் இருக்கிறீர்கள்" என்று அர்ஜுனன் கிருஷ்ணனிடம் கூறினார்
94. **பன்னிரண்டாம் அத்தியாயம் பக்தி யோகம் ஸ்லோகம் :2**	மனத்தை என்னில் நிலையுறச் செய்து, யோகம் தனிலே சிரத்தையுளோர் அவ்வாறென்னை உபாசனை செய்யும் பக்தரே மேலாம் யோகியராம்.	அர்ஜுனா! என்னிடமே மனத்தை நிறுத்து. என்னிடமே புத்தி ஈடுபடுத்து அதற்குப் பிறகு என்னிடமே வாழ்வாய். இதில் சிறிது ஐயம் இல்லை" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
95. **பன்னிரண்டாம் அத்தியாயம் பக்தி யோகம் ஸ்லோகம் :8**	மனத்தை என்னில் நிறுத்திடுவாய் நீ அறிவையும் என்னில் ஆக்கிடுவாய் அப்பால் என்னில் நிரந்தரமாய் நீ வாழ்வாய்; ஐயம் இல்லையே	அர்ஜுனா! என்னிடமே மனத்தை நிறுத்து. என்னிடமே புத்தி ஈடுபடுத்து. அதற்குப் பிறகு என்னிடமே வாழ்வாய். இதில் சிறிது ஐயம் இல்லை " என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
96. **பன்னிரண்டாம் அத்தியாயம் பக்தி யோகம் ஸ்லோகம் :12**	அப்பியாசத்திலும் ஞானம் மேலாம் ஞானம் தனிலோ தியானம் மேல் தியானம் தனிலும் வினைப்பயன் துறவோ துறவால் அமைதி விரைவாகும்	அர்ஜுனா! பொருள் புரியாமல் செய்யும் சாஸ்திர பயிற்சியை விட சாஸ்திரங்கள் மூலம் கிடைக்கும் ஞானம் சிறந்தது.அந்த ஞானத்தை காட்டிலும் என் விஷ்வவரூபத்தை தியானம் செய்வது சிறந்தது. அந்த தியானத்தை காட்டிலும் கருமத்தின் பயனை தியாகம் செய்வது சாலச்சிறந்தது. ஏனெனில் தியாகத்தின் மூலம் மேலான அமைதி உண்டாகிறது" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்

97. **பன்னிரண்டாம் அத்தியாயம் பக்தி யோகம் ஸ்லோகம் : 17**	வெறுப்பு மகிழ்ச்சி இல்லா உளத்தன் துயரம் ஆசை கொள்ளாதான் நன்மை தீமை துறப்போன் அவனே அன்பன் எனக்கு மிக இனியன்	எவன் ஒருபோதும் மகிழ்வதில்லையோ, வெறுப்பதில்லையோ, துயரப்படுவதில்லையோ, எதற்கும் ஆசைப்படுவதில்லையோ நல்லதும் தீயதுமான செயல்கள் அனைத்தையும் துறந்தவனாக இருக்கிறானோ, அவனே என்னிடம் பக்தி உள்ளவன். அவனே எனக்கு பிரியமானவன் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
98. **பன்னிரண்டாம் அத்தியாயம் பக்தி யோகம் ஸ்லோகம் : 20**	எனையே கதியாய் நாடும் அன்பர் பலன் எண்ணாமல் பணியாற்றித் தர்மா முதமாம் இந்நெறி நிற்போர் அவரே எனக்கு மிக இனியர்	எவர்கள் என்னிடம் நம்பிக்கையோடு, என்னையே மேலான கதியாகக் கொண்டு, மேலே கூறப்பட்டுள்ள இந்தத் தர்மாமுதத்தைப் பயனைக் கருதாது அன்புடன் அனுஷ்டிக்கிறார்களோ, அந்த பக்தர்கள் எண்கு மிகவும் பிரியமானவர்கள் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
99. **பதின்மூன்றாம் அத்தியாயம் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம் ஸ்லோகம் :1**	குந்தியின் மைந்தா! இவ்வுடலம் தான் க்ஷேத்திரம் என்று நீ அறிவாய் இதனை அறியும் அறிவுள்ளோனை ஞானியர் க்ஷேத்ரஜ்ஞன் என்பர்	அர்ஜுனா! இந்த உடல் க்ஷேத்திரம் என்ற பெயரால் அழைக்கப் படுகின்றது. இதை எவன் அறிகிறானோ, அவனை க்ஷேத்திரக்ஞன் என்று தத்துவமறிந்த ஞானிகள் கூறுகிறார்கள்' என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
100. **பதின்மூன்றாம் அத்தியாயம் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம் ஸ்லோகம் : 5**	ஐம்பெரும் பூதம், மதி, அகங்காரம் முக்குண மாயை, புலன் பத்தும் மனமும் புலப்பொருள் ஐந்தும் அதுபோல் விருப்பு, வெறுப்பு, சுக துக்கம்.	நுண்ணிய ஐம்பெரும் பூதங்களும், அகங்காரமும், புத்தியும், மூலப் பிரகிருதியும், புத்துப் புலன்களும், மனமும், புலன்களுடைய நுகர்பொருள்களான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவையும்; அதபோல விருப்பு, வெறுப்பு, சுக துக்கமும் ஆகும்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
101 . **பதின்மூன்றாம் அத்தியாயம் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம் ஸ்லோகம் : 6**	உடலொடு உணர்வு, மனத்தில் உறுதி, யாவும் கூடியதே க்ஷேத்திரம்- அதன் வகை தரமும் இவையே என்று சுருங்கச் சொல்வேன் உனக்கேயான்	விருப்பு வெறுப்பு இன்பம் துன்பம் உடற்கட்டு சைதன்ய சக்தி மேலும் உறுதி ஆகிய மாறுபாடுகள் உடையதே இந்த க்ஷேத்திரம் என்று சுருக்கமாக சொல்லப்படுகிறது" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்!
102. **பதினான்காம் அத்தியாயம் குணத்ரயவிபாக யோகம் ஸ்லோகம்:3**	மாபெரும் இயற்கை எனது நிலையம் பாரதா! யான் அதில் கரு ஈந்தேன்- உயிர்க்குல மெல்லாம் அதனில் நின்றே பிறப்பை எய்தும் என்றோர்வாய்	அர்ஜுனா! என்னுடைய மஹத் பிரம்மம் என்கிற மூலப் பிரகிருதி அகில சராசரங்களுக்கும் பிறப்பிடம். நான் அந்தப் பிறப்பிடத்தில் உயிரினங்களின் கருவை வைக்கிறேன். அந்த ஜடசேதன சேர்க்கையிலிருந்து சகல சராசரங்களுடைய உற்பத்தி ஏற்படுகிறது" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
103. **பதினான்காம் அத்தியாயம் குணத்ரயவிபாக யோகம் ஸ்லோகம்:4**	குந்தியின் மைந்தா! கருவுறும் யாவிலும் பிறக்கும் எல்லா உயிருக்கும் மஹத்' எனும் இயற்கை தாயாகின்றாள் உயிர்தரும் தந்தை யானேதான்	அர்ஜுனா! பலவிதமான அனைத்துப் பிறப்பிடங்களிலும் எத்தனை உருவங்கள், உடல்கள் கொண்ட பிராணிகள் உண்டாகின்றனவோ, அவை எல்லாவற்றிற்கும் பிரகிருதியே பிறப்பிடம், கருத்தரிக்கும் தாய். நான் விதையளிக்கும் தந்தை" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
104. **பதினான்காம் அத்தியாயம் குணத்ரயவிபாக யோகம் ஸ்லோகம்: 5**	மாபெரும் தோளா! இயற்கை யினின்றும் பிறந்திடும் ஸத்துவம் ஆதியதாம் முக்குணம், அழியாத் தேகியை உடலில் முற்றும் இணைத்துக் கட்டிடுமே	அர்ஜுனா! சத்துவ குணம், ரஜோ குணம், தமோ குணம் என்ற பிரகிருதியிலிருந்து உண்டான மூன்று குணங்களும் அழிவற்றதான ஜீவாத்மாவை இவ்வுடலில் கட்டுகின்றன" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
105. **பதினான்காம் அத்தியாயம் குணத்ரயவிபாக யோகம் ஸ்லோகம்:6**	அவற்றுள் சத்துவம், பாவமற்றோனே! ஒளிமயமானது, மாசிலதாம், அனாமயமானது; இன்பம், ஞானம், இவற்றின் பற்றால் இணைத்திடுமே.	பாவமற்றவனே! அந்த முக்குணங்களில் சத்துவ குணம் தூய்மையானதால் ஒளி கொடுக்கக் கூடியது; மேலும் விகாரமற்றது. ஆயினும், அது இன்பத்தில் கொண்ட தொடர்பினாலும், ஞானத்தில் கொண்ட தொடர்பினாலும், அதாவது அபிமானத்தினாலும் கட்டுகிறது" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
106. **பதினான்காம் அத்தியாயம் குணத்ரயவிபாக யோகம் ஸ்லோகம்: 7**	குந்தியின் மைந்தா! ஆசையின் வடிவே ராஜஸம் என நீ அறிந்திடுவாய் விருப்பும் பற்றும் தோற்றுவதாய் வினைப் பற்றால் தேகியைத் தளைப்பதுவே	அர்ஜுனா! விருப்பு வடிவாகிற ரஜோ குணம் ஆசை, பற்று -இவற்றில் உண்டானதாக அறிந்து கொள், அது ஜீவாத்மாவைக் கர்மங்களிலும், கர்மங்களின் பயன்களிலும் உள்ள தொடர்பால் கட்டுகிறது.
107. **பதினான்காம் அத்தியாயம் குணத்ரயவிபாக யோகம் ஸ்லோகம்: 8**	பாரதா! தாமஸம் உயிர்களை மயக்கும்; அறியாமையிலே பிறப்பதுவாம் அசட்டை சோம்பல் உறக்கம் இவற்றால் கட்டுவதாம் என்றே அறிவாய் நீ.	அர்ஜுனா! உடற்பற்றுடைய எல்லோரையும் மயக்கக்கூடிய தமோ குணமோ அஞ்ஞானத் திலிருந்து உண்டானதாக அறிந்துகொள். அது இந்த ஜீவாத்மாவை வீணான செயல்களில் ஈடுபடுத்துவதுடன், சோம்பல், தூக்கம் ஆகியவற்றை கட்டுகிறது" என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்

108. **அத்தியாயம் 14 குணத்ரயவிபாக யோகம் ஸ்லோகம்: 8**	ஸத்துவ குணத்தைப் பெற்றோர் உயர்வர் ராஜஸ குணமுள்ளோர் இடையனவார்- கடையாம் தாமஸ குணமுன்னோரோ கீழ்நோக்குடனே தாழ்கின்றார்	சத்துவ குணம் உடையவர்கள் உயர்ந்த நிலையை அடைகிறார்கள்; ரஜோ குணம் உடையவர்கள் மனித நிலையிலேயே இருக்கிறார்கள்; தாமஸ குணம் உடையவர்கள் தாழ்ந்த பிறவிகளையும் துன்பங்களையும் அடைகிறார்கள் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
109. **அத்தியாயம் 14 குணத்ரயவிபாக யோகம் ஸ்லோகம்: 26**	பக்தி யோகம் தனையே துணை என அசையாதென்னைப் பணிவோனே முக்குணம் முற்றும் தாண்டிடுவோனாய்ப் பிரம்மம் தனையே எய்திடுவான்	“எவன் முழுமையான பக்தியுடன் என்னை இடைவிடாது வழிபடுகிறானோ, அவன் மூன்று குணங்களையும் கடந்து, பரப்பிரம்மத்தை அடையத் தகுதி பெறுகிறான் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
110. **அத்தியாயம் 14 குணத்ரயவிபாக யோகம் ஸ்லோகம்: 27**	அழியா நிலையாம் பிரம்மம் யானே அசையா நிலையும் யானே தான் என்றும் நிலையாம் அறனும் யானே ஈடில்லாப் பேரின்பம் யானேதான்	அந்த அழிவற்ற பரப்பிரம்மத்திற்கும், அமரத்துவ நிலைக்கும், எப்பொழுதும் நிலைத்திருக்கும் தர்மத்திற்கும், வேறுபாடற்ற ஒரே சீரான ஆனந்தத்திற்கும் உறைவிடம் நானே” என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
111. **அத்தியாயம் 15 புருஷோத்தம யோகம் ஸ்லோகம்: 1**	மேலே வேரொடு கீழ் கிளையாக அழியா அரசமரம் போலே அமைவது வாழ்வு; இலைகளோ வேதம், இதறிவோனே வேதியனாம்.	அர்ஜுனா! ஆதிபுருஷனான பரமேசுவரன் எதற்கு வேரோ, பிரம்மதேவன் எதற்கு முக்கிய நடுமரமோ, அந்தப் பிரபஞ்ச உருவமான அரசமரத்தை அழியாதது எனக் கூறுகிறார்கள். மேலும், எந்த அரசமரத்திற்கு வேதங்களே இலைகளோ, சம்சாரம் என்ற அந்த அரசமரத்தை, எவர் வேறுடன் சேர்த்துத் தத்துவரீதியாக அறிகிறாரோ, அவரே வேதத்தின் உட்கருத்தை அறிந்தவர் ஆவார்” என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
112. **அத்தியாயம் 15 புருஷோத்தம யோகம் ஸ்லோகம்: 2**	ஐம்புலப்பொருளே பைந்தளிராகக் குணத்தால் அதன் கிளை செழித்தோங்கிக் கீழும் மேலும் கிளையாய்ப் படர வேராம் கர்மம் மாந்தரில் ஆம்.	அர்ஜுனா! அந்த சம்சாரம் என்ற அரசமரத்தினுடைய கிளைகள் முக்குணங்கள் என்ற நீரினால் வளர்ந்து, புலன்நுகர்ப் பொருட்களாகிய தளிர்களுடன் கூடி, தேவ, மனித, விலங்கு முதலிய பிறவி உருவாகி, கீழும் மேலுமாக எங்கும் பரவியுள்ளன.
113. **அத்தியாயம் 15 புருஷோத்தம யோகம் ஸ்லோகம்: 3**	இங்கதன் உருவம் ஆதி, ஈறு நிலைக்கனன் யாதும் தெளிவில்லை பற்றின்மை எனும் பெருங் கோடரியால் வாழ்க்கை மரத்தை வெட்டியபின்.	அர்ஜுனா! தொடக்கமும் முடிவும் இல்லாத இந்த சம்சார மரத்தை, அகங்காரம் மற்றும் ஆசைகள் என்ற வேர்களுடன், உறுதியான வைராக்கியம் என்னும் கோடரியால் வெட்டி விலக்க வேண்டும் என்று கிருஷ்ணர் கூறினார்.
114. **அத்தியாயம் 15 புருஷோத்தம யோகம் ஸ்லோகம்: 4**	எப்பதம் எய்தில் மறுபிறப்பிலையோ அப்பதம் தனையே தேடிடுக ஆதி புருஷன் மூலகாரணன் அவனே என்று சரணுறுக	அர்ஜுனா! இந்த சம்சாரத்தை விட்டு மீண்டும் திரும்பாத பரம்பதமான பரமேசுவரனைத் தேடி, இந்த சம்சார மரத்தின் ஆதியான ஆதிபுருஷன் நாராயணனை சரணடைகிறேன் என்ற உறுதியுடன், அவரைச் சிந்தித்து தியானிக்க வேண்டும் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
115. **அத்தியாயம் 15 புருஷோத்தம யோகம் ஸ்லோகம்: 6**	தீயொடு சூரிய சந்திராலும் விளக்கிட வொண்ணா ஒளி எதுவோ, எதனை அடைந்தோர் மீளுவதிலையோ அதுவே எனது பரமபதம்	அர்ஜுனா! சூரியன், சந்திரன், அக்னி ஆகியவற்றின் ஒளி தேவையில்லாத, ஒருமுறை அடைந்தால் மீண்டும் பிறவி எடுக்காத சுயம்பிரகாசமான பரமபதமே என்னுடைய மேலான ஸ்தானம் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
116. **அத்தியாயம் 15 புருஷோத்தம யோகம் ஸ்லோகம்: 8**	காற்றோடு இணைந்த மலரின் மணம் போல் ஜீவன் உடம்பில் புகும்போதும் உடம்பைப் பிரிந்து செல்லும்போதும் புலனையும் பற்றிச் செல்கிறான்.	காற்று மணத்தை எடுத்துச் செல்வது போல, ஜீவாத்மாவும் ஒரு உடலை விட்டு வெளியேறும்போது மனம் மற்றும் புலன்களுடன் மற்றொரு உடலை அடைகிறான் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
117. **அத்தியாயம் 15 புருஷோத்தம யோகம் ஸ்லோகம்: 12**	ஆதித்யனில் உதித்தே உலகை முற்றும் விளக்கும் பேரொளியும் நிறைமதி ஒளியும் தீயின் ஒளியும் எண்ணில் தோன்றிய ஒளியாம்	அர்ஜுனா! சூரியன், சந்திரன், நெருப்பு ஆகியவற்றை ஒளிரச் செய்யும் அனைத்து ஒளியும் என்னுடைய தெய்வீக ஒளியே என்பதை அறிந்துகொள் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
118. **அத்தியாயம் 15 புருஷோத்தம யோகம் ஸ்லோகம்: 15**	யாவருளத்தும் உறைவோன் யானே நினைவும் மறப்பும் மறைவும் யான் வேதம் அனைத்தால் அறிபொருள் யானே வேதாந்தம் தரும் வேதியன் யான்	அர்ஜுனா! எல்லா உயிர்களின் இதயத்திலும் அந்தர்யாமியாக இருப்பவன் நானே. நினைவும், அறிவும், தெளிவும் என்னிடமிருந்தே வருகின்றன. வேதங்களால் அறியப்படுபவனும், வேதாந்தத்தின் உட்பொருளை அறிந்தவனும் நானே என்று கிருஷ்ணர் கூறினார்.

119. **அத்தியாயம் 15 புருஷோத்தம யோகம் ஸ்லோகம்: 19**	மயக்கம் நீங்கி இவ்வாறென்னைப் புருஷோத்தமன் என்று உணர்கின்றோன் முற்றும் உணர்ந்த முழுமதி பெற்றோன் அவனே என்னைத் தொழுவோனாம்.	பாரத குலத் தோன்றலே! எந்த ஞானி என்னை இவ்விதம் புருஷோத்தமன் என்று தத்துவ ரீதியாக அறிகிறானோ, எல்லாம் அறிந்த அவன் எல்லாவிதமாகவும் எப்போதும் வாசுதேவனும் பரமெஸ்வரனும் ஆன என்னையே வழிபடுகிறான்" என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
120. **அத்தியாயம் 16 தைவாசுர சம்பத் விபாக யோகம் ஸ்லோகம்: 1**	அஞ்சா நிலைமை உள்ளத் தூய்மை ஞான யோகம் தனில் உறுதி ஜம்புலன் அடக்கம் ஈகை யாகம் தவத்தொடு நேர்மை மறையோதல்	அர்ஜுனா! அச்சமின்மை, மனத்தூய்மை, ஞானத்தில் உறுதி, புலனடக்கம், தானம், இறைவழிபாடு, தவம், வேத சாஸ்திரங்களை கற்றல், இறைவன் நாமத்தைப் போற்றுதல், துன்பங்களைப் பொறுத்தல் ஆகியவை தெய்வீக குணங்கள் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
121. **அத்தியாயம் 16 தைவாசுர சம்பத் விபாக யோகம் ஸ்லோகம்: 2**	அஹிம்சை சத்தியம் சினம் கொள்ளாமை தியாகம் சாந்தி வசையின்மை இரக்கம் பிறர் பொருள் விழையாத் தன்மை இனிமை நாணும் மனத்திண்மை	அர்ஜுனா! பிறருக்கு தீங்கு செய்யாமை, உண்மையை இனிமையாகப் பேசுதல், கோபமின்மை, தியாக உணர்வு, மன அமைதி, உயிர்களிடம் இரக்கம், பற்றின்மை, மென்மை, நாணம் மற்றும் மனத்திண்மை ஆகியவை தெய்வீக குணங்கள் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
122. **அத்தியாயம் 16 தைவாசுர சம்பத் விபாக யோகம் ஸ்லோகம்: 3**	வீரம் பொறுமை மனதில் உறுதி தூய்மை பகையரில்லா உள்ளம் செருக்கில்லா நிலை இவையே அர்ஜுனா தெய்வீக இயல்பினர் சம்பத்தாம்.	பொலிவு, பொறுமை, உறுதி, புறந்தூய்மை, எவரிடமும் பகைமை பாராட்டாமை, தான் மதிக்கத்தக்கவன் என்று செருக்கு கொள்ளாமை இவை எல்லாம், அர்ஜுனா, தெய்வீக சம்பத்துடன் பிறந்தவர்களின் இலக்கணமாகும் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
123 **அத்தியாயம் 16 தைவாசுர சம்பத் விபாக யோகம் ஸ்லோகம்: 4**	பார்த்தா! பகட்டோடு இறுமாப்பு உடைமை தற்பெருமை சினம் கடுந்தன்மை அஞ்ஞானம் இவை அசுர இயற்கை கொண்டே பிறப்போர்க்கு இயல்பாகும்.	அர்ஜுனா! பகட்டும், ஆடம்பரமும், இறுமாப்பும், தற்பெருமையும், கோபமும், கடுமையும், அஞ்ஞானமுமே அசுரப் பண்புடன் பிறந்தவர்களுடைய இலக்கணங்களாகும் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
124 **அத்தியாயம் 16 தைவாசுர சம்பத் விபாக யோகம் ஸ்லோகம்: 7**	செயத்தகு நல்வினை யாதாம் என்றும் தகாத் தீவினை யாதென்றும் அறியார் அசுர இயற்கை உடையார் தூய்மை ஒழுக்கம் உண்மை இலார்.	அர்ஜுனா! அசுர இயல்புடையவர்கள் செய்ய வேண்டியது, செய்யக் கூடாதது எது என்பதை அறியமாட்டார்கள். அவர்களிடம் தூய்மை, நன்னடத்தை, உண்மை ஆகிய நற்குணங்கள் இருப்பதில்லை என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
125 **அத்தியாயம் 16 தைவாசுர சம்பத் விபாக யோகம் ஸ்லோகம்: 15**	செல்வ சீமான், உயர்ந்த குலத்தன், எனக்கு நிகராய் யார் உண்டு? வேட்போன், ஈவோன், மகிழ்வோன் யானே" என்றறியாமையில் மயங்கிடுவோர்!	அர்ஜுனா! செல்வம், உயர்ந்த பிறப்பு, தன்னைவிட உயர்ந்தவர் யாருமில்லை என்ற அகந்தையுடன், யாகம், தானம், இன்பம் ஆகியவற்றில் பெருமை கொள்பவர்கள் அசுர குணத்தால் தூய்மையற்ற வழியில் சென்று வீழ்ச்சியடைகிறார்கள் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
126 **அத்தியாயம் 16 தைவாசுர சம்பத் விபாக யோகம் ஸ்லோகம்: 21**	நரகம் மூவித வாசலை கொண்டது காமம் கோபம் உலோபம் என ஜீவாத்மாவை கெடுப்பவை இவையே எனவே மூன்றும் நீத்தல் மேல்	காமம், கோபம், பேராசை ஆகிய இந்த மூன்று வகையான நரகத்தின் நுழைவாயில்கள் ஆத்மாவை நாசம் செய்யக்கூடியவை. அதாவது இழிந்த நிலையில் தள்ளக்கூடியவை. ஆகவே இம்மூன்றையும் விட்டுவிட வேண்டும் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
127 அத்தியாயம் 16 . தைவாசுர சம்பத் . விபாக யோகம் ஸ்லோகம்: 23	சாஸ்திர விதிகளை மீறியே வாழ்வோன் ஆசை உந்திட வினையாற்றி, பூரண நிலையை அடையாதவனாய்ச் சுகமும் முக்தியும் இழக்கின்றான்.	எவன் சாஸ்திர முறையை மறந்து, தன் மனம் போனபடி நடந்து கொள்கிறானோ, அவன் வெற்றியை அடைவதில்லை; பெரும் பேற்றை, மேலான நிலையை அடைவதில்லை; சுகத்தையும் அடைவதில்லை என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
128. **அத்தியாயம் 16 தைவாசுர சம்பத் விபாக யோகம் ஸ்லோகம்: 24**	எனவே சாஸ்திரம் உனக்கா தாரம் நன்மை தீமை வகுப்பதனால் சாஸ்திர விதியின் நெறியினை அறிந்து கர்மம் செய்தல் உன் கடனாம்	ஆகவே உனக்கு இவ்வுலகில் செய்யத்தக்கது செய்யத் தகாதது எது என்று நிர்ணயிப்பதில் சாஸ்திரம் தான் சான்றாகும் இவ்வாறு தெரிந்து கொண்டு சாஸ்திர முறைகளில் சொல்லப்பட்டிருக்கும் கர்மங்களை ஆற்றக்கடவாய் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
129 **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 7**	உண்ணும் உணவும் ஒவ்வொரு சாரார் விருப்பின் பாங்கால் மூவகையாம்- யாகம் தவத்தொடு தானம் யாவும் அவ்வாறே; அதன் பிரிவைக் கேள்	மனிதர்களின் இயல்புக்கு ஏற்ப உணவு, யாகம், தவம், தானம் ஆகிய அனைத்தும் சாத்விகம், ராஜஸம், தாமஸம் என மூன்று வகைப்படும். அவற்றின் வேறுபாடுகளை கேள் என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்

130 **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 11**	கைம்மாறு என்றும் கருதாராய்த் தம் கடனே என்று உறுதியுடன் ஆராதனையாய் விதி வழுவாது இயற்றும் வேள்வி ஸாத்விகமாம்.	எந்தப் பலனையும் எதிர்பாராமல், தன் கடமை என்று எண்ணி, விதிமுறைகளைப் பின்பற்றி செய்யப்படும் வேள்வியே ஸாத்விக வேள்வி ஆகும்.
131 **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 12**	பாரத குலத்தின் நல்லாய்! கேளாய் பயனை விரும்பிய வழிபாடும் டம்பம் கருதிச் செய்யும் வேள்வியும் ராஜஸ வேள்வி என்றறிக.	பாரத குலத்தில் சிறந்தவனே! தன் வழிபாட்டிற்கும் வேள்விக்கும் கிடைக்கும் பலனை விரும்பியும், புகழ் மற்றும் ஆடம்பரத்தை நோக்கமாகக் கொண்டும் செய்யப்படும் வேள்வி ராஜஸ வேள்வி எனப்படும்.என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்
132 **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 13**	உணவைப் பெருக்க உதவாமல் விதிமுறையற்று, மந்திரமும் தக்ஷிணை, சிரத்தையும் இல்லாமல் செயப்படும் வேள்வி தாமஸிகம்.	விதிமுறைகளைப் பின்பற்றாமல், மந்திரம், தக்ஷிணை, நம்பிக்கை ஆகியவை இல்லாமல், எந்த நல்ல நோக்கமும் இல்லாமல் செய்யப்படும் வேள்வி தாமஸ வேள்வி ஆகும்.என்று கிருஷ்ணர் அர்ஜுனிடம் கூறினார்
133 **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 14**	வானவர் அந்தணர் குருக்கள் ஞானியர் யாவரிடத்திலும் பணிவன்பு தூய்மை நேர்மை, புலன்மேல் ஆட்சி அஹிம்சை யாவும் உடல்தவமாம்	தெய்வங்கள் அந்தணர்கள் பெரியோர்கள் ஞானிகள் இவர்களை பூஜித்தல் தூய்மை நேர்மை, பிரம்மச்சரியம் அஹிம்சை ஆகியவை உடலால் செய்யக்கூடிய தவம் என்று சொல்லப்படுகிறது என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்.
134 **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 15**	தீமை இல்லாச் சொல்லொடு ஸத்தியம் இனிமை நலனும் பயக்கும் சொல் வேதம் ஓதல் நாம ஜபங்கள் யாவும் வாக்குத் தவமாகும்	எது பிறர் மனத்தை புண்படுத்தாமல் இனிமையும் நலனும் அளிக்கக்கூடியதாகவும் உண்மையாகவும் இருக்குமோ அந்தப் பேச்சும் வேதசாஸ்திரங்களை ஓதுதலும் பகவான் உடைய நாம கீர்த்தனமும் வாக்கினால் செய்யக் கூடிய தவம் என்று கூறப்படுகிறது என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
135 **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 16**	மனத்தின் நிறைவும் நல்லெண்ணங்களும் மௌனம் தன்னைத் தானாளல் உள்ளத் தூய்மை இவைகள் யாவும் மனத்தால் ஆகிய தவமாகும்	மன மகிழ்ச்சி அமைதியான இயல்பு பகவான இடைவிடாது சிந்தித்து இருக்கின்ற இயல்பு மனவடக்கம் உள்ள தூய்மை இவையெல்லாம் மனத்தால் ஆற்றக்கூடிய தவம் எனப்படுகின்றன என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
136 **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 20**	கைமா றென்றும் செய்யாதர்க்கும் காலத்தால் செய்யும் தானம் எல்லாம் தக்க இடத்தில் தக்கார்க்கு ஈந்தால் ஸாத்விக தானம் எனப்படுமே	தானம் செய்வது தம் கடமை எனக் கருதி எந்த தானம் உரிய இடத்திலும் உரிய காலத்திலும் தகுதியானவர்க்கும் தனக்குப் பிரதி உபகாரம் செய்யாதவர் ஆயினும் அவருக்கும் தன்னலமின்றி கொடுக்கப்படுகிறதோ அத்தகைய தானம் ஸாத்விகம் என்று கருதப்படுகிறது என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
137. **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 21**	கைம்மாறு ஒன்றே கருதிக் கொண்டு பலனை நாடிய தானம் எல்லாம் தூய மணத்தால் செய்யாமையினால் ராஜஸ தானம் எனப்படுமே	எந்த தானம் மனவருத்தத்தோடு கைமாறு கருத்தியோ பயனைக் கருத்தில் கொண்டோ கொடுக்கப்படுகிறதோ அந்த தானம் ராஜசம் எனப்படும் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
138 **அத்தியாயம் 17 ச்ரத்தாத்ரய விபாக யோகம் ஸ்லோகம்: 22**	தக்கார்க்கு அல்லால் ஈயும் தானம் தகாத இடத்தில் காலத்தில் பணிவே இன்றி இழிவாய்ச் செய்யின் அதுவே தாமஸ தானமுமாம்	எந்த தானம் மரியாதை இன்றி இகழ்ச்சியோடு தகாத இடத்திலும் தகாத காலத்திலும் தகுதியற்றவர்களுக்கு கொடுக்கப்படுகிறது அது தாமஸம் எனப்படுகிறது என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறினார்
139 **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 42**	உள்ளும் புறமும் அடக்கம் உடைமை நோன்பு தூய்மை பொறை நேர்மை ஞான விஞ்ஞானம் ஈஸ்வர தியானம் அறவோர்க்கு இயல்பாம் செயலாகும்	அடக்கம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், வேத–சாஸ்திர அறிவு, இறைவன் மீது நம்பிக்கை மற்றும் தியானம் ஆகிய நல்ல பண்புகள் அறத்தை கடைப்பிடிப்பவர்களின் இயல்பான செயல்களாகும் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறுகிறார்.
140 **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 55**	பக்தியால் எனையே எத்தன்மையன் யார் என்றே ஒருவன் அறிவானேல் அவனும் உண்மையில் எனையே அறிந்து விரைவில் எனையே அடைகின்றான்	உண்மையான பக்தியின் மூலம் இறைவனை உள்ளபடியே தத்துவ ரீதியாக அறிந்தவர், இறைவனுடன் ஐக்கியமாகி அவரையே அடைகிறார் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறுகிறார்.

141 **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 58**	என்னில் உள்ளம் வைத்து என் அருளால் இடையூர் எல்லாம் தாண்டிடுவாய் அகந்தை கொண்டு இதை கேளா விடிலோ அழிவே எய்தி மாண்டிடுவாய்	என்னையே மனதில் வைத்து, என் அருளை நம்பினால் அனைத்து இன்னல்களையும் கடந்து விடுவாய்; அகந்தையால் என் சொற்களை ஏற்காவிட்டால் அழிவைச் சந்திப்பாய் என்று கிருஷ்ணர் கூறுகிறார்
142. **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 61**	ஈஸ்வரன் எல்லோரிதயத் துள்ளும் நிாந்தரமாகத் திகழ்கின்றான்-உடலாம் பொறியில் ஆடும் பாவையாய் உயிர்களை மாயையால் சுழல்விப்பான்.	இறைவன் எல்லா உயிர்களின் இதயத்திலும் இருந்து, தனது மாயையின் மூலம் அவர்களை இயக்குகிறார் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறுகிறார்.
143. **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 65**	என்னில் அன்பும் மனமும் வைப்பாய் எனக்காய் தியாகம் செய்திடுவாய் எனையே வணங்கு எனைச் சார்வாய் நீ சத்தியம் சொன்னேன் நட்புறவால்	உண்மையான பக்தியின் மூலம் இறைவனை உள்ளபடியே தத்துவ ரீதியாக அறிந்தவர், இறைவனுடன் ஐக்கியமாகி அவரையே அடைகிறார் என்று கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறுகிறார்.
144 **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 66**	அறிவினையாவும் துறந்தோனாக எனையே சரணம் புகுவாய் நீ யான் உன் பாவம் யாவும் நீக்கி மோட்சம் அருள்வேன் கலங்காதே	அர்ஜுனா! உன் கடமைகள் அனைத்தையும் என்னிடம் அர்ப்பணித்து, என்னையே முழுமையாகச் சரணடை. நான் உன்னை அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவித்து மோட்சம் அருள்வேன்; எனவே கலங்காதே என்று கிருஷ்ணர் கூறுகிறார்
145 **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 68**	மேலாம் இந்த தத்துவம் தன்னை யார் என் அன்பர்க்கு உரைப்பாரோ சீரிய பக்தர் அவர்களும் எனையே அடைவார் ஐயம் இல்லையே	கீதையின் உயர்ந்த தத்துவத்தை பக்தியுடன் பிறருக்கு எடுத்துரைப்பவர், நிச்சயமாக என்னையே அடைவார் என்று கிருஷ்ணர் கூறுகிறார்.
146. **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 69**	மானுட உலகில் அவர்க்கும் மேலாய் நன்மை செய்வோம் வேறில்லை அவர்கட்கீடாய் எனக்கினியோரே அவனில் யாரும் இல்லையே	கீதையின் உயர்ந்த தத்துவத்தை பிறருக்கு எடுத்துரைப்பவரை விட, மனிதர்களுக்கு நன்மை செய்பவர் வேறு யாரும் இல்லை; அவர் கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானவர்.
147. **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 70**	அறமே உருவாம் இப்பெரு நெறியை ஓதிடுவோரின் மதி வேள்வி என்னை போற்றும் ஆராதனையாம் இது என் திடமாம் கொள்கையே	கீதையின் இந்த உயர்ந்த ஞானத்தை பக்தியுடன் படிப்பதும், ஓதுவதும் என்னை வழிபடுவதற்குச் சமம் என்று கிருஷ்ணர் கூறுகிறார்.
148 **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 73**	அச்சுதா! உமது அருளால் எனது மயக்கம் அற்றது உணர்வுற்றேன் ஐயம் நீங்கி உறுதியும் பெற்றேன் நும் ஆணைப்படி நடந்திடுவேன்	அச்சுதா ! உங்கள் அருளால் எனது மோகம் அழிந்தது என்னால் ஞான ஒளி பெறப்பட்டது நான் சந்தேகமற்றவனாக உறுதியாக இருக்கிறேன் உங்கள் ஆணையை நிறைவேற்றுவேன் என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறினார்.
149 **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 75**	வியாசர் பெருமான் திருவருளாலே மேலாம் மறைப்பொருள் யோகம் இதை யோகேஸ்வரனாம் கண்ணனே கூற அவர் திருவாயால் யான் கேட்டேன்.	வியாசரின் அருளால் தெய்வீகப் பார்வை பெற்ற சஞ்சயன், கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு கூறிய உயர்ந்த கீதா ஞானத்தை நேரடியாகக் கேட்டதாக திருதராஷ்டிரரிடம் கூறுகிறான்
150 **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 76**	அரசே அற்புத புனித பேச்சை கேசவ அர்ஜுனர் நிகழ்த்தியதாம் சம்பாஷணையை நினைத்து நினைத்து அளவிலா இன்பம் அடைகின்றேன்	அரசே, கிருஷ்ணரும் அர்ஜுனனும் நடத்திய புனிதமான, நன்மை தரும் உரையாடலை நினைத்து நினைத்து நான் அளவில்லா சஞ்சயன் அளவில்லா மகிழ்ச்சி அடைகிறேன் என்று சஞ்சயன் திருதராஷ்டிரிடம் கூறினார்
151 **அத்தியாயம் 18 மோக்ஷ ஸந்யாஸ யோகம் ஸ்லோகம்: 78**	எங்கெங்கெல்லாம் யோகேஸ்வரனாம் கண்ணனும் வில்லுள பார்த்தனுமாம் அங்கே திருவும் ஜெயமும் உண்டு மங்களம் நீதியும் ஆம் உண்மை	எங்கு கிருஷ்ணரும் அர்ஜுனனும் இருக்கிறார்களோ, அங்கு செல்வம், வெற்றி, மங்களம், நீதி ஆகியவை நிச்சயம் நிலைத்திருக்கும்.

சகலமும் ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்